www.padippakam.com

# எமது அமைப்பின் சர்வதேச மாநாடு

24 ஏப்பரலிலிருந்து - 10 மே மாதம் வரை '94

படிப்பகம்

www.padippakam.com


| | | |
|---|---|---|
| உள்ளடக்கம் | | 02 - 04 |
| மார்க்சியம் பற்றிய புரிதல் | | 05 - 07 |
| தேசியவாதம் பற்றி | | 08 - 10 |
| தேசம் என்றால் என்ன | 08 | |
| தேசியவாதம் முற்போக்கானதா? பிற்போக்கானதா? | 09 | |
| வர்க்கங்களும் சமூக சக்திகளும் | | 11 - 11 |
| புரட்சியாளர்களின் குணாம்சம் | | 12 - 12 |
| அரசு | | 13 - 14 |
| அரசாங்கம் | 13 | |
| அதிகாரத்துவம் | 13 | |
| வன்முறை இயந்திரம் | 13 | |
| லொபி மற்றும் அழுத்தக் குழுக்கள் | 13 | |
| சிவில் சமூகம் | 14 | |
| புரட்சிகர அரசும் — அது அதிகாரமயப்படலும் | 14 | |
| பாராளுமன்ற வாதம் | 14 | |
| ஒரு கட்சி ஆட்சி | 14 | |
| அரசு உலர்ந்து உதிர்வது | 14 | |
| கட்சி | | 15 - 17 |
| கட்சியின் நிறுவன வடிவங்கள் | 15 | |
| கட்சியும் கட்சி இராணுவமும் | 16 | |
| புரட்சிகர கட்சியும் அதிகாரத்தைக் கைப்பற்றலும் | 17 | |
| கட்சிகளுக்கிடையிலான உறவு | 17 | |
| புரட்சிகரக் கட்சியும் சமூக மாற்றமும் | 17 | |
| ஜனநாயகம் | | 18 - 20 |
| ஜனநாயகம் குறித்து | 18 | |
| ஜனநாயகமும் நிறுவனங்களும் | 18 | |
| கட்சியும் ஜனநாயகமும் | 18 | |
| ஜனநாயகத்தில் கவனிக்க வேண்டிய சில அம்சங்கள் | 19 | |
| புரட்சிகர இராணுவத்தில் ஜனநாயகம் | 19 | |
| ஜனநாயகம். தனியாகவும் கூட்டாகவும் | 20 | |
| எதிர்கால ஜனநாயகம் | 20 | |




படிப்பகம்

www.padippakam.com


சித்தாந்தம் 21 - 22

சித்தாந்தம், கோட்பாடு என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு 21

பிரதிபலிப்பு கோட்பாடு 22

பொருள்வகை தன்மை பற்றிய கோட்பாடு 22

புத்திஜீவிகள் 23 - 24

ஒழுக்க நெறிகள் 25 - 25

பெண்ணிலை வாதம் 26 - 28

தாராள பெண்ணிலை வாதம் 27

மார்க்சிய பெண்ணிலை வாதம் 27

தீவிர பெண்ணிலை வாதம் 27

சோசலிச பெண்ணிலை வாதம் 27

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்ணிலை வாதம் கையாளப்பட்ட விதம் 28

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான சில குறிப்பான விடயங்கள் 29 - 30

முஸ்லீம் மக்கள் 29

மலையக மக்கள் 30

தமிழீழத்தில் வாழும் சிங்கள மக்கள் 30

சாதியம் 31 - 31

சாதியம் தொடர்பான எமது அமைப்பின் நிலைப்பாடு 31

யாழ் மையவாதம் 32 - 32

கட்சியின் சர்வதேச நிலைப்பாடு 33 - 34

நமது போராட்ட சூழலில் குறிப்பான விடயங்கள் 33

இந்தியா 33

தெற்கு ஆசிய நாடுகள் 34

பொதுவாக சர்வதேசிய போக்குகளில் 34




படிப்பகம்

www.padippakam.com

1970 வரையிலான காலகட்டம்

1970 - 1983 இடையிலான காலகட்டம் 35

1983 - இன்று வரையில் 36

நாம் போராட்டத்தை மேற்கொள்ளும் காலகட்டம் 36

தத்துவம் 37 - 37

ஆன்மீகம் 38 - 38

பாலுறவுத் தேர்வு 39 - 39

வயதுத்துவம் 40 - 40

தள அறிக்கைகள் 41 - 41

முடிவுரை 42 - 42



படிப்பகம்

www.padippakam.com

# மார்க்சியம் பற்றிய புரிதல்

மார்க்சியம் பற்றிய மரபார்ந்த பார்வையானது; பொதுவாக மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், மாஓ போன்றவர்களின் கருத்துக்களை மட்டுமே மார்க்சியம் என்கிறது. இப்பார்வை மார்க்சியத்தை ஒருவகை மதமாக்கி விடுகிறது. மார்க்சியம் அனைத்துப் பிரச்சினைக்குமே தீர்வினை உள்ளடக்கியுள்ளது என்கிறது. சொல்லப்பட்டவற்றை அப்படியே நடைமுறைப்படுத்துவது மட்டுமே எமது கடமை என வலியுறுத்துகிறது.

மார்க்சியம் உண்மையில் உயர்ந்த கோட்பாடாக இருந்த போதிலும் அது சமூகம், சமூகப் புரட்சி பற்றிய பொதுவான விளக்கத்தை மட்டுமே எமக்குத் தருகிறது. இந்த பொதுவான விதிகளுக்கு மேல் ஒவ்வொரு புரட்சியாளரும் தாம் முகம் கொடுக்கும் குறிப்பான நிலைமைகளுக்கு ஏற்ப குறிப்பான விதிகளை தாமே கண்டறிய வேண்டியுள்ளது.

மார்க்சியமானது வெறுமனே உலகையும் சமூகத்தையும் வியாக்கியானம் செய்வதுடன் நின்றுவிடாமல், அவற்றை மாற்றியமைப்பதையும் நோக்கமாக கொண்டது. எனவே உலகத்தை புரிந்து கொள்ளுவதில் மிக முன்னேறிய கோட்பாடாக மார்க்சியம் தன்னை நிரூபித்தாக வேண்டியுள்ளது.

மார்க்சியம் ஒரு விஞ்ஞானம் என்ற வகையில் அது உலகத்தை மாற்றியமைக்கும் கருவியாக (tool) உள்ளது என்பதே சரியான விளக்கமாகும். அதேவேளை மார்க்சியம் மட்டும்தான் விஞ்ஞானமா என்ற கேள்வியும் எழுகிறது. உண்மையில் மார்க்சியத்திற்கு வெளியிலும் பல்வேறு விஞ்ஞானங்கள் உள்ளன. மார்க்சியம் மேலும் செழுமை பெற வேண்டுமாயின் அது தனக்கு வெளியிலுள்ள பல விஞ்ஞானங்களும் ஈட்டியுள்ள வளர்ச்சிகளையும் உள்வாங்க வேண்டும்.

மார்க்சியம் பற்றிய எமது கடந்த கால புரிதல் மிகவும் குறுகியது. அதில் மார்க்சிய வரட்டுச் சூத்திரமாக்கப்பட்டிருந்தது. உண்மையில் இச்சூத்திரங்கள் சமூகத்தில் நிலவும் சாதியம், தேசியவாதம், பெண்ணிலைவாதம், பாலியல் தெரிவு போன்ற சிக்கலான பிரச்சினைகளை உள்ளடக்கியதாக சமூக உருவாக்கத்தை விளக்கவில்லை. இந்த வகையில் மார்க்சியம் பற்றிய எமது இன்றைய புரிதல் கூட ஒரு அரிச்சுவடிதான். இதையிட்டு நாம் வெட்கப்படத் தேவையில்லை. இதனை ஒப்புக் கொள்ளும் போதே நாம் சரியான புரிதலை எட்டக் காலடி எடுத்து வைத்துள்ளோம் என்றாகிறது.

நாம் புரட்சியாளர்கள் என்ற வகையில், நடப்பு ஒழுங்கை கட்டிக் காக்க வேண்டிய அவசியம் எமக்கு எப்போதுமே கிடையாது. வரட்டுச் சூத்திரங்களாக மார்க்சியத்தை கட்டிக் காப்பதிலும் எமக்கு நலன்கள் இல்லை. எனவே திறந்த மனதுடன் பல்வேறு சிக்கலான விடயங்களையும் கேள்விக்குள்ளாக்கி புதிய இலக்குகளை நோக்கி முன்னேறத் தயங்கக் கூடாது.

கடந்த காலங்களில் மார்க்சியம் பற்றிய ஆழமான புரிதல் தமிழீழம், தமிழகம் மற்றும் தென்னாசிய சூழலில் போதுமானதாக இல்லை. மார்க்சியம் பற்றிய அறிமுகம் முறையாக செய்யப்படவில்லை. குறிப்பாக சோவியத்திலும், சீனாவிலும் உருவாகிவிட்டிருந்த அதிகார வர்க்கங்கள் தமது நிலைப்பாடுகளுக்கு நியாயம் தேடும் வகையில்தான் மார்க்சியத்தை பரவச் செய்யும் முயற்சிகளையும் மேற்கொண்டதாக கருதவேண்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

மார்க்சிய முன்னோடிகளது நூல்களை மொழிபெயர்ப்பதிலும் கூட இதேவிதமான அணுகுமுறைகளை நாம் அவதானிக்க முடியும். "மூலதனம்" "ஜேர்மன் சித்தாந்தம்" போன்ற மிக முக்கியமான நூல்களை மொழிபெயர்க்காது விட்டுவிட்டு, சர்ச்சைக்குரியதாக கருதப்படும் "டூரிங்கிற்கு மறுப்பு", இயற்கையின் இயக்கவியல்" போன்ற நூல்களை மொழிபெயர்த்தும், குறிப்பாக கவனிக்கத்தக்கவை. அவ்வாறே "மூலதனத்தின்" தொடர்ச்சி எனக் கருதப்படும், லெனின் எழுதிய "ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி" எனும் நூல் மொழிபெயர்க்கப்படாது, "என்ன செய்ய வேண்டும்", "ஓரடி முன்னால் ஈரடி பின்னால்" போன்ற நூல்களை மொழிபெயர்த்ததும் கூட ஒருவிதத்தில் மார்க்சியம் பற்றிய குறுகிய புரிதலுக்கு காரணமாயுள்ளது.

அவ்வாறே, லெனினின் சமகாலத்தவர்களான ரோசா லக்சம்பேர்க், ட்ரொஸ்கி மற்றும் பலரது முக்கிய படைப்புகளும், பிற்காலங்களில் வந்த லூக்காஸ், கிராம்ஸி, சார்த்தர், அல்தூசர், பிராங்போர்ட் சிந்தனையாளர்கள் போன்ற மிகப் பலரது படைப்புகளும் இருட்டடிப்பு செய்யப்பட்டது அல்லது முற்றாக மறுதலிக்கப்பட்டதும் மார்க்சியம் பற்றிய புரிதலுக்கு ஊறு விளைவித்துள்ளன. இன்று உலகெங்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் பலதரப்பட்ட போராட்டங்களில் ஈடுபடுகின்றார்கள். இந்த போராட்டங்களுடன் கூடவே, அந்தந்த சமூகங்களில் இருந்து புதிய கோட்பாட்டாளர்களும் உருவாகி இந்த போராட்ட அனுபவங்களையும், இந்த போராட்டங்கள் முகங்கொடுக்கும் குறிப்பான பிரச்சினைகளையும் கோட்பாட்டாக்கம் செய்துள்ளனர். ஆனால் மார்க்சியத்தை பீடித்துள்ள ஐரோப்பிய மையவாதம் காரணமாக இந்த வளர்ச்சிகளை சரியான விதத்தில் அங்கீகரிக்க, உள்வாங்கிக் கொள்ள தயங்கும் போக்கும் பொதுவாகக் காணப்படுகிறது.

மார்க்சியத்தை கற்கும் முறையிலும் கூட நாம் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதிகாரத்துவ வடிவிலான போதனை முறைகளை கைவிட்டு விமர்சன மனப்பாங்கான விவாத முறைகளை ஊக்குவிக்க முயலவேண்டும்.

மார்க்சியமானது கடந்த காலத்தில் ஒரு பாட்டாளி வர்க்க சித்தாந்தமாக மட்டும் புரிந்து கொள்ளப்பட்டிருந்தது. மார்க்சியம் தோன்றிய காலகட்டம், குறிப்பான சூழ்நிலையில் அன்றிருந்த எல்லா வர்க்கங்கள் சமூக சக்திகளையும் விட பாட்டாளி வர்க்கமானது மிகவும் ஒடுக்கப்பட்ட மிகவும் போர்க் குணாம்சம் மிக்க, தனது விடுதலையின் நிமித்தம் முழுச் சமூகத்தையும் மாற்ற வேண்டிய அவசியத்தை ஏற்றுக் கொண்ட புரட்சிகர வர்க்கமாக நிலவியது. அத்துடன் அக்கால தத்துவங்களில் மார்க்சியமே மிகவும் முன்னேறியதாகவும் இருந்தது. மார்க்சியம் தனது பொருள்வகை சக்தியை பாட்டாளி வர்க்கத்திலும், பாட்டாளி வர்க்கம் தனது ஆன்மீக சக்தியை மார்க்சியத்திலும் கண்டன. இவ்வாறாக, அன்மைய குறிப்பான வரலாற்று நிலைமைகளின் கீழ் மார்க்சியத்துடன் இணைந்து (articulate) கொண்டது. இவற்றின் இணைப்பாக அப்போது மார்க்சியம் ஒரு பாட்டாளி வர்க்க சித்தாந்தம் எனக் கருதப்பட்டது நியாயமே! ஆனால் சமூக நிலைமைகள் முற்றாக மாறிச் சிக்கலாகிக் கிடக்கும் இன்றைய நிலையில், பல்வேறு சமூக சக்திகளும் சிந்தனைத் துறையில் வளர்ச்சி பெற்று தீவிரமடைந்து வரும் நிலையில் பாட்டாளி வர்க்க சித்தாந்தம் என்ற அழுத்தம் பல மயக்கங்களை ஏற்படுத்துவதாக உள்ளது.

மார்க்சியமானது ஒரு தத்துவம் என்ற வகையில் மிகவும் விஞ்ஞான பூர்வமான ஒரு முறையியலாக இருந்து சமூகத்தை புரிந்து கொள்வதிலும், அதனை மாற்றியமைப்பதிலும் வழிகாட்டுகிறது. இந்த முறையியலானது பல்வேறு சமூகப் பிரச்சினைகளிலும் செயற்பட்டு அந்தந்த துறையில் பல கோட்பாடுகளை உருவாக்கியுள்ளது. ஏகாதிபத்தியங்களும் பல்வேறு ஆதிக்க சக்திகளும் வெகுசன தொடர்புசாதனங்களில் விரிவான அளவில் கட்டுப்பாடுகளை பெற்றுள்ள நிலையில் அவை தத்தமது விழுமியங்களை (values) அனைத்து மக்களது விழுமியங்களாக மாற்றவும், அதன் மூலம் ஒரு விரிவான சித்தாந்த மேலாண்மையை நிலைநாட்டவும் செய்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்களும் அவர்களது புரட்சிகரப் பிரிவுகளும் கூட இப்படிப்பட்ட விழுமியங்களை தமது சொந்த விழுமியங்களாக ஏற்றுக் கொள்ள நேர்வதானது, அவர்களது புரட்சிகர ஆற்றலை காயடிப்பு செய்துவிடுகிறது. இதனால் ஒடுக்கப்பட்ட மக்களது விடுதலைக்கான கருவியாக செயற்படும் மார்க்சியமானது, ஒடுக்கப்பட்ட மக்களது நலன்கள் சார்ந்த, அவர்களது விழுமியங்கள் பற்றியும் அக்கறை கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இப்படியாக மார்க்சியத்தை ஒரு [illegible] கோட்பாடுகளின் தொகுதியாகவும் புரிவதோ அல்லது பார்ப்பதே மார்க்சியம் பற்றிய சரியான புரிதலாக இருக்க முடியும்.

மார்க்சியத்தினுள் பல்வேறு சிந்தனைப் பள்ளிகள் உருவாகியுள்ளன. இருப்பியல்வாதம், அமைப்பியல்வாதம், பிராங்போர்ட் சிந்தனைகள் போன்றன இவற்றில் சிலவாகும். இந்த ஒவ்வொரு துறையும் சமூகத்தின் ஒட்டுமொத்த பிரச்சினைகளுக்கும் விளக்கம் கூறாவிட்டாலும் ஒவ்வொன்றும் சில குறிப்பான விடயங்களில் தமது ஆழமான கவனத்தை குவிக்கின்றன. அமைப்பியல்வாதம் சிக்கலான சமூகத்தை புரிந்து கொள்வது பற்றியும்; பிராங்போர்ட் சிந்தனைகள் முதலாளித்துவ சமூகத்தின் வக்கிரத் தனங்களையும் ஆழமாக விளக்கியுள்ளன. இச்சிந்தனைப் பள்ளிகளின் பங்களிப்புகளையும் மார்க்சியம் உள்வாங்க வேண்டும். அதன் மூலம் மார்க்சியம் மிகவும் உயர்ந்த கோட்பாடாக தொடர்ந்தும் வளர்ந்து செல்ல வேண்டும்.

இவ்வாறாக, மிகவும் முன்னேறிய கோட்பாடான மார்க்சியத்தின் வெளிச்சத்தில் எமது சமூகப் பிரச்சினைகளை கோட்பாட்டாக்கம் செய்வதன் மூலம் புதிய கோட்பாடுகளை உருவாக்கும் போதுதான் நாம் எமது சித்தாந்த மேலாண்மையை தமிழீழ போராட்டத்தில் நிலைநாட்ட முடியும். இதன் மூலம் புரட்சிக்கு உண்மையான அரசியல் தலைமையை வழங்க முடியும். இந்தவிதமான செயற்பாட்டினூடாக நாம் மார்க்சியத்தை செழுமைப்படுத்துவதிலும் எமது பங்களிப்பை வழங்குகின்றோம்.

மார்க்சியத்தை மார்க்சியம், லெனினிசம், மாவோயிசம் என மரபாக அழைக்கப்படுகிறது. எந்தவொரு கோட்பாட்டையும் குறிப்பாக அடையாளப்படுத்துவது என்ற வகையில் தொடக்கத்தில் இதனை மார்க்சியம் என்கிறோம். இது சரியானதே! ஆனால் மார்க்சியம் தொடர்ந்து வளர்ச்சியுறுகிறது. இதற்கு லெனின், மாவோ இன்னும் நூற்றுக்கணக்கான பலர் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர். எனவே, இவர்கள் அனைவரின் பெயர்களை தனித்தனியாக குறிப்பிட்டு அழைக்க முடியாது. எனவே மார்க்சியம் என பொதுவாக அழைப்பது மட்டுமே போதுமானது எனக் கருதலாம்.

கோட்பாட்டுப் பணிகள் எனும் போது, மார்க்சியம் தொடர்பாக பல்வேறு மொழிகளிலும் உள்ள நூல்களையும் ஆய்வுகளையும் மொழிபெயர்ப்பதும் முக்கியத்துவம் பெறுகிறது. ஒரு சமூகம் தனக்கென மிக முன்னேறிய கோட்பாடுகளை உருவாக்குவதாயின், அதுவரை காலமும் உலகளாவிய அளவில் நடைபெற்றுள்ள கோட்பாட்டு வளர்ச்சிகளை அச்சமூகம் தனக்குள் வாங்கிச் செரித்துக் கொள்வது அவசியமாகிறது. இந்த வகையில், ரஷ்ய, சீன புரட்சியாளர்களின் முதல் தலைமுறையானது இப்படிப்பட்ட முக்கியமான கோட்பாட்டு நூல்களை மொழிபெயர்த்து, தமது சமூகத்திலுள்ள முன்னேறிய பிரிவினரிடம் கொண்டு செல்வதிலேயே தமது வாழ்நாளின் பெரும்பகுதியை செலவழித்தாக வேண்டியிருந்தது. இந்த வகையில் இன்று நாம் மேற்கொள்கின்ற மொழிபெயர்ப்பு முயற்சிகள் கூட குறிப்பான கோட்பாட்டு முக்கியத்துவம் உடையவையாகும்.

தொகுத்து நோக்கினால், மார்க்சியம் என்பது ஒரு மதமோ வரட்டுச் சூத்திரங்களோ அல்ல. மாறாக அது முன்னேறியதும் முன்னேறிக் கொண்டிருக்கும் தத்துவம் ஆகும். அந்த வகையில் முறையியலாகவும், புரட்சிகர மாற்றத்தை நிகழ்த்தும் கோட்பாட்டுக் கருவியாகவும் உள்ளது. இதே விளக்கத்துடன் நாம் மார்க்சியத்தை தொடர்ந்தும் செழுமைப்படுத்த வேண்டும். இதன் மூலம் மார்க்சியம் மேலும் உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தெடுக்கப்படுகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# தேசியவாதம் [illegible]

தேசியவாதம் பற்றிய கோட்பாட்டு உருவாக்கம் மார்க்சியத்தில் இன்றுவரை பற்றாக்குறை உடையதாக கருதப்படுகிறது. சமூகவியல் துறையிலும் நிலைமை இதுவே. வர்க்கக் குறுக்கல்வாதம், பொருளாதாரவாதம் என்பவற்றால் இறுகிப்போன மரபுவழி மார்க்சியவாதிகளால் தேசியவாதம் பற்றி புரிய/விளக்க முடியாதநிலை. வர்க்கத்தை புறநிலையாக கண்டதுபோல தேசம் என்பதையும் புறநிலையான சில காரணிகளை அடிப்படையாக வைத்து மதிப்பிட்ட தவறான போக்கும் (உ-ம்) தேசம் என்பதை மொழி, பிரதேசம் பொருளாதாரம் போன்ற புறநிலையான அம்சங்களினால் வரையறுக்க முனைவது. தேசம் என்பது ஓர் அகநிலை சார்ந்து வலுவாக இருப்பதை கவனிக்கத் தவறியதும் இவர்களின் தவறுக்கு அடிப்படை காரணங்களாகிறது.

எமது போராட்டத்தில், ஈரோஸ் போன்ற அமைப்புகள் தேசிய விடுதலை போராட்டத்தை வர்க்க போராட்டமாக காட்ட முயன்றமை, வர்க்க குறுக்கல் வாதத்தின் தொடர்ச்சியே இதுவெனலாம்.

## தேசம் என்றால் என்ன ?

கடந்த காலத்தில் ஸ்டாலினிய வரையறையானது மரபாக பின்பற்றப்பட்டமை: நான்கு, ஐந்து காரணங்களின் அடிப்படையில் தேசத்தை வரையறுக்க முயலுதல். கடந்த, நிகழ்கால வரலாற்று அனுபவங்கள் இந்த வரையறை தவறு என்பதை நிரூபித்துள்ளமை, ஸ்டாலினுடைய காலத்திலும் கூட இந்த வரையறையானது சரியாக இருக்கவில்லை.

தேசம் என்பது மக்களால் கற்பிதம் செய்யப்படும் ஒன்று, மக்கள் எப்போது தம்மை தனியான தேசமாக இனங்காண்கிறார்களோ அப்போது அவர்கள் தேசமாகிறார்கள். இந்நிலை பல்வேறு காரணங்களால் உருவாகிறது. எனவே தேச உருவாக்கம் என்பது வரலாற்று தற்செயல் நிகழ்வு ஆகுதல். சமூக உருவாக்கத்தை சூத்திரங்களுக்குள் அடக்கிவிடுவதை லெனின் அங்கீகரிக்கவில்லை. தேசம் என்பதை திட்டவட்டமான கோட்பாடாக முன்வைப்பதையும் லெனின் அப்போது தவிர்த்திருந்தார். தேசத்தை ஒரு வரையறைக்குள் அடக்க முயன்ற ஸ்டாலினின் "தேசங்களின் சுயநிர்ணய உரிமை" கட்டுரையிலும் லெனின் அதிக அக்கறை காட்டவில்லை. சுயநிர்ணய உரிமை என்பதற்கு மேல் லெனின் ஆழமாக செல்லவில்லை. இது சிக்கலான தற்செயலான நிகழ்வுப் போக்கு என லெனின் புரிந்து கொண்டிருந்தார் எனக் கருதப்படுகிறது.

தேசம், நாடு, அரசு என்ற பதங்களிலுள்ள குழப்பம். உண்மையில், தேசம் என்பது திட்டவட்டமாக ஒரு சமூகத்தைக் குறிக்கிறது. தேசம் என்பதை சரியாக புரிந்து கொள்ள தேசியவாதம், என்பது பொருளாதாரத்திலிருந்து வேறுபட்ட சுயாதீனமான கட்டமைப்பு என்ற அடிப்படையில் ஆய்வு செய்ய வேண்டும்.

தேசியவாதத்தின் குறிப்பான பண்புகளை கருத்தில் கொள்தல். தேசம் என்பது சார்பளவில் சுயாதீனமான கட்டமைப்பு என்ற வகையில் தேசம் தனித்துவமான பண்புகளை பெறுதல். வரலாற்றில் காணப்பட்ட தேசியவாத இயக்கங்களின் அனுபவங்களில் இருந்து அதன் பல்வேறுபட்ட குறிப்பான பண்புகளையும் கண்டறிதல்.



படிப்பகம்

www.padippakam.com

# தேசியவாதம் முற்போக்கானதா? பிற்போக்கானதா?

நமது போராட்ட சூழலில் காணப்படும் பார்வைகள் – தேசியவாதம் முற்போக்கானது, அதனை முன்னெடுக்கும் எந்த சக்தியும் முற்போக்கானது என்ற பார்வை. இதன்படி வெளிப்படையாகவே பிற்போக்கான சக்தி தேசியவாதத்தை முன்னெடுத்தால் அது தேசிய சக்தியே அல்ல என்பதாக இது நீட்சி பெறுதல்.

மாறாக, தேசியவாதமே பிற்போக்கானது என்று பார்த்தல். எனவேதான் எமது போராட்டம் நெருக்கடிக்குள்ளானது என்ற பார்வை. தேசியவாதம் பற்றிய விளக்கம் மிகவும் சிக்கலானது என்பது எமது நிலை.

தேசியவாதமானது, ஒரு வெகுசன சித்தாந்தம் என்ற வகையில் அது நடுநிலையானது. இது வேறு பல சித்தாந்தங்களுடன் தன்னை இணைத்துக் (articulate) கொள்ளக் கூடியது. அதனைப் பொறுத்து தேசியவாதம் முற்போக்கான அல்லது பிற்போக்கான தோற்றத்தைப் பெறுகிறது.

உதாரணம்: தேசியவாதம் + பிற்போக்கு சித்தாந்தம் = பிற்போக்கு தேசியவாதம்

தேசியவாதம் + முற்போக்கு சித்தாந்தம் = முற்போக்கு தேசியவாதம்

தன்னளவில் தேசியவாதத்திற்கு முற்போக்கான, பிற்போக்கான பண்புகள் இல்லை. அது தன்னை எந்த சக்திகளுடன் இணைத்துக் கொள்கிறது என்பதை எந்த சக்திகளால் முன்னெடுக்கப்படுகிறது என்பதை பொறுத்தே அதன் பண்பு அமைகிறது.

புரட்சிகர சக்திகள் தேசியவாதத்தை முன்னெடுக்கும் போது முகம் கொடுக்கும் பிரச்சினைகள் – தேசியவாதத்தின் குறிப்பான பண்புகளின் அடிப்படையில் இப்பிரச்சினைகள் எழுகிறது. எமது போராட்டத்தில் இந்த பிரச்சினைகள் எந்தெந்த குறிப்பான வடிவங்களில் வெளிப்படுகின்றன என்பதை இனங்கண்டு, அவற்றிற்கு சரியான மாற்றுகளை முன்வைப்பது பற்றி எதிர்காலத்தில் நாம் விரிவாக பரிசீலிக்க வேண்டியுள்ளது. தேசியவாதத்துடன் பிற்போக்கு சித்தாந்தம் இணைந்திருப்பின் அந்த இணைவை உடைத்து ((de-articulate) முற்போக்கு சித்தாந்தங்களுடன் இணைத்தல் (re-articulate). தேசியவாதத்தில் பிற்போக்கு அம்சங்கள் வெளிப்பட்டால் தேசியவாதத்தை ஒட்டுமொத்தமாக நிராகரிப்பதிலுள்ள தவறு. பிற்போக்கு தன்மைகளை நிராகரித்து முற்போக்காக முன்னெடுக்க வேண்டிய அவசியம்.

ஒடுக்கும் மக்களின் தேசியவாதத்திற்கும் ஒடுக்கப்படும் மக்களின் தேசியவாதத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை குறித்துக் கொள்ளுதல். தனக்கென தனியான அரசைக் கொண்டுள்ள ஒரு தேசம் அதற்கு மேலும் தனது தேசியவாத அபிலாஷைகளை வெளிப்படுத்துமானால் அதில் வெளிப்படையாகவே ஏனைய தேசங்களை ஒடுக்கும் நோக்கங்கள் வெளிப்படுவதையும், அதேவேளை ஒடுக்கப்படும் ஒரு தேசம் தனது தேசிய இயக்கத்தை முன்னெடுக்கத் தவறுவது வரலாற்று ரீதியில் மிகவும் மோசமான தவறாகிவிடும் என்பதையும் கருத்தில் கொண்டு, சிங்கள பேரினவாத இயக்கத்தை அம்பலப்படுத்தும் போதே, தமிழ் தேசியவாத இயக்கத்தை தீவிரமாக முன்னெடுப்பதையும் வலியுறுத்துதல்.



படிப்பகம்

தேசிய விடுதலை இயக்கத்தில் குறியீடுகள், சின்னங்கள் போன்றவற்றுக்குள்ள முக்கியத்துவங்களையும் கவனத்தில் கொள்ளுதல். தேசியம் ஒரு சித்தாந்தம். ஒரு கற்பிதம் செய்யப்பட்ட உணர்வு என்ற வகையில் தேசியவாத உணர்வுகளை மனதில் பதிப்பதை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு குறியீடுகள், சின்னங்கள் வழக்கில் உள்ளன. வெறும் அடையா-ளங்களாக இல்லாமல் இவை நாளாந்த வாழ்வில் செயற்பட்டு, மக்கள் மனதில் தேசம் என்ற உணர்வை ஆழமாக பதிக்கின்ற வகையில் இவை முக்கியத்துவம் பெறுகின்றன. குறியீடுகள், சித்தாந்தம், தன்னிலை (subject) என்பவற்றிற்கிடையிலான சிக்கலான உறவினூடாக இதனை புரிந்து கொள்வது அவசியமாகும்.

சுயநிர்ணய உரிமை பற்றிய பல்வேறு வியாக்கியானங்கள் குறித்து, இவற்றில் சுயநிர்ணய உரிமை பற்றிய சரியான புரிதலின்மை பொதுவாக நிலவுகிறது. சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கின்றோம், பிரிவினையை நிராகரிக்கின்றோம் என்பதிலுள்ள அபத்தம். சுயநிர்ணய உரிமை என்பதை வெறுமனே சட்டவாத பிரச்சினையாக குறுக்கி, ஸ்தூலமான அரசியல் நிலைப்பாடுகள் மேற்கொள்வதை தவிர்த்து விடுவதிலுள்ள சுயமையை அம்பலப்படுத்தல் - சுயநிர்ணய உரிமை என்பது ஒரு தேசத்திலிருந்து அந்நியப்படுத்த முடியாத அதன் பிறப்புரிமையாகும். சுயநிர்ணய உரிமையை பிறர் அங்கீகரிப்பது பற்றி பேசுவதே அந்த உரிமை சாராம்சத்தில் மறுப்பதற்கு சமமானது.

ஒரு தேசம் தனது தலைவிதியை தானே தீர்மானிப்பதே சுயநிர்ண உரிமையாகும். சேர்ந்திருப்பதா, பிரிவதா என்பது குறித்து தேசத்திற்கு சம்பந்தமில்லாதோர் பேசுவதே சுயநிர்ண உரிமையை மீறுகின்றதாகிறது.

ஒடுக்கப்பட்ட ஒரு தேசம் என்ற வகையில் தமிழ் மக்களது விமோசனத்திற்கு தேசியவாதத்தின் இன்றியமையாத பாத்திரத்தை வலியுறுத்தகுதல் - புரட்சிகர,ஜனநாயக பிரிவினர் கடந்த காலத்தில் இழைத்த தவறுகள்தான் எமது தேசிய விடுதலை போராட்டம் பிற்போக்கு சக்திகளின் கரங்களில் விழ்வதற்கான காரணம் - புரட்சிகர சக்திகள் இப்போராட்டத்தின் தலைமையை கையேற்பதன் மூலமே அதனை தமிழ் தேசத்தின் உண்மையான விடுதலையை நோக்கி இட்டுச் செல்லலாம்.

www.padippakam.com

# வர்க்கங்களும் சமூக சக்திகளும்

மார்க்சியத்தில் வர்க்கம் என்ற கருத்தாக்கம் பிரதான இடம் வகிக்கிறது. மார்க்சியத்தை வர்க்க கோட்பாடு என்றும் கூறலாம். மார்க்சியத்தில் வர்க்க அக்கறை மேலோங்கியிருப்பது ஏன்? மார்க்சியத்திற்கு முந்தியிருந்த தத்துவங்களில் இருந்து அது அடிப்படையில் வேறுபடுகிறது. வரலாற்றை வர்க்க போராட்டங்களின் வரலாறாக விஞ்ஞான பூர்வமாக துல்லியமாக எடுத்துக் காட்டுதல். தொடர்ந்து வந்த காலங்களில் பல்வேறு சமூக போராட்டங்களையும் மேற்கூறிய அடிப்படையில் மார்க்சியம் ஆய்வு செய்கிறது.

மார்க்சிய கோட்பாடு முகம் கொடுக்கும் இன்றைய நெருக்கடிகள் சிக்கலான பல முரண்பாடுகளை கொண்டுள்ள இன்றைய சமூகங்களை வர்க்கங்கள் என்ற கருத்தாக்கங்களில் மட்டும் விளக்குவதிலுள்ள கடினம். சமூகத்தை எளிமையாக, இரு துருவத்தன்மை (bi-polar) கொண்டதாக வைத்து விளக்குவதிலுள்ள தவறு. மாறாக, அமைப்பியல்வாத மார்க்சிய அணுகல் சமூகத்தை பன்முகத்தன்மை (multipolar) கொண்ட சிக்கலான கட்டமைப்பாக எடுத்து விளக்குதல். சமூகத்தில் நிலவும் பலவகை முரண்பாடுகள் மற்றும் மேலாதிக்க முரண்பாடு போன்ற பிரச்சினைகளை பற்றிப் பேச வேண்டிய அவசியம். இங்கு வர்க்க அக்கறை மட்டும் சமூகத்தை விளக்க போதுமானதாக இல்லை என்பது தெளிவாகிறது.

மார்க்ஸ் வாழ்ந்த கால கட்டமும் மிகவும் புரட்சிகரமான வர்க்கமாக பாட்டாளி வர்க்கம் அப்போது இருந்தமையும் இன்றைய நிலையில் பாட்டாளி வர்க்கத்தின் குணாம்சங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம். மேற்கு நாடுகளின் ஏகாதிபத்திய போக்குகள், செல்வத்திரட்சி, அதன் ஒரு பகுதி பாட்டாளி வர்க்கங்களை சென்றடைகையில் அவற்றுக்கு ஏற்படும் பண்பு மாற்றங்கள். புரட்சிகரக் குணாம்சம் சிதைவடைதல்.

மேற்கு நாடுகளுக்கும் – 3ம் உலக நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள். மேற்கு நாட்டு பாட்டாளி வர்க்கங்கள் பூர்சுவா வர்க்கக் குணாம்சங்கள் பெறுதல்.

இதேவேளை 3ம் உலக நாடுகளிலும் தொழில்துறை பாட்டாளி வர்க்கம் ஓரளவு சலுகை பெற்ற வர்க்கமாக அமைதல். இவைதவிர ஒடுக்கப்பட்ட பல வர்க்கங்கள், சமூக சக்திகள் மிகவும் புரட்சிகரமான பாத்திரம் வகித்தல். இந்நிலையில் பாட்டாளி வர்க்கம் அதன் தலைமை என்று பேசுவதிலுள்ள சிக்கல். மாறாக, அந்தந்த சமூகங்களிலுள்ள ஒடுக்கப்பட்ட, புரட்சிகர சமூக சக்திகள் என்ற வகையில் எமது கவனங்களைக் குவித்தல். மிகவும் சிக்கலான, பல்வகை முரண்பாடுகள் ஒன்றின் மேலொன்று இறுகிச் சேர்ந்து, இடம்பெயர்ந்து மேலாதிக்கத்திற்கு வரும் வாய்ப்புகளையும் கருத்தில் கொண்டு, சமூக உருவாக்கத்தில் சமூகத்தை புரட்சிகரமாக மாற்றியமைப்பதில் அக்கறையுள்ள சமூக சக்திகளை இனங்காணல் – இப்படிப்பட்ட பல்வகை புரட்சிகர சமூக சக்திகளும் இணைந்த செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது. – இதற்கு மேல், ஆதிக்க சக்திகள், புரட்சிகர சக்திகள், மேலாதிக்க சித்தாந்தம் என்பவை பலதரப்பட்டவற்றின் "கூட்டாக" (block) இருப்பதை கவனத்தில் கொள்ளல். எனவே சமூக உருவாக்கத்தில் பல்வேறு முரண்பாடுகள். சமூகத்தை புரட்சிகரமாக மாற்றியமைப்பதில் பங்களிக்கும் சக்திகள் போன்றவற்றில் பல்வேறு புரட்சிகர சமூக சக்திகளின் இணைவு என்பதற்கு மிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்த பின்னணியில், பாட்டாளி வர்க்கத் தலைமை, பாட்டாளி வர்க்க சித்தாந்தம் என்பவை கேள்விக்குள்ளாக்க அதனுடன் தொடர்பான வர்க்கக் குணாம்சம், வர்க்க நலன்கள், பாட்டாளி வர்க்க கட்சி போன்ற யாவுமே எமது போராட்ட சூழலில் மீள்வரை செய்ய வேண்டிய நிலை. பாட்டாளி வர்க்கம் என்பதற்கு பதிலாக ஒடுக்கப்பட்ட புரட்சிகர சமூக சக்திகள் என முன்மொழிய வேண்டிய அவசியம். "பாட்டாளி வர்க்கக் கட்சி" என்பதை "புரட்சிகர கட்சியாக" மீள் அர்த்தம் செய்தல்.



படிப்பகம்

www.padippakam.com

முன்பு நாம் சமூக உருவாக்கத்தை இருதுருவத் தன்மை கொண்ட மாதிரியாக (bi-polar model) விளங்கிக் கொண்டபோது, பாட்டாளி வர்க்கத்தை புரட்சிகர வர்க்கமாக வரையறுத்திருந்தோம். பாட்டாளி வர்க்க குணாம்சத்தை புரட்சியாளர்களும் ஏனைய மக்கள் பிரிவினரும் சுவீகரித்தாக வேண்டிய புரட்சிகர குணாம்சங்களாக வரித்துக் கொண்டோம். இப்போது இந்த இருதுருவத் தன்மை கொண்ட மாதிரியானது (bi-polar model) பன்முகத் தன்மை கொண்ட மாதிரியாக (multi-polar model) ஆக மாற்றியமைக்கப்படுகையில் பாட்டாளி வர்க்கம் என்பதற்குப் பதிலாக புரட்சிகர சமூக சக்திகள் என முன்மொழிகிறோம். அதேவேளை புரட்சிகர குணாம்சம் என எதனை முன்மொழிவது என்ற கேள்வியும் கூடவே இங்கு எழுகின்றது. குறிப்பாக, ஒரு புரட்சிகர தலைமை தனது அங்கத்தவர்களுக்கு வழிகாட்டவும், பரந்துபட்ட மக்களை வழிநடாத்தவும் சில புரட்சிகர குணாம்சங்களை முன்மொழிவதுடன், சமுதாயத்தில் ஏற்கனவேயுள்ள ஆதிக்க விழுமியங்களை கைவிடவும், புதிய புரட்சிகர குணாம்சங்களை சுவீகரிக்குமாறு வழிநடாத்த வேண்டிய தேவையும் இருக்கின்றது. இவற்றை நாம் புரட்சிகர அறநெறிகள் (code of ethics) என அழைக்கலாம். இந்த புரட்சிகர அறநெறிகளை சுவீகரிப்பதை நோக்கி ஒவ்வொரு புரட்சியாளரும் பிரக்ஞைபூர்வமாக செயற்படுவதும் அவசியமாகிறது.

ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள், சமூக பிரிவுகள் தன்னுணர்வு பெறுவது பற்றி – சமூக உருவாக்கத்தை சிக்கலானதாக புரிந்து கொள்ளும் போது, தானேயாகிய வர்க்கம், தனக்காகிய வர்க்கம் என்ற கருத்தாக்கங்கள் கூட தானே ஆகிய சமூக சக்தி, தனக்காகிய சமூக சக்தி என்பதாக மாற்றம் பெறுகின்றது.

தானேயாகிய சமூக சக்தி, தனக்காகிய சமூக சக்தி என்றாகிறது.

தானேயாகிய சமூக சக்திகள் – தன்னுணர்வு பெறாத, புரட்சிகர தன்மையை வெளிப்படுத்தாத பிரிவுகள்

தனக்காகிய சமூக சக்திகள் – மேற்படி சக்திகள் தன்னுணர்வு பெற்று புரட்சிகர குணாம்சங்களை பெற்று புரட்சிகர செயற்பாடுகளில் ஈடுபடுவவை என அர்த்தப்படலாம்.

இவ்வாறாக, சமூக சக்திகள் புரட்சிகர உணர்வு, பிரக்ஞை பெறுவது அச்சமூகத்திலுள்ள முன்னேறிய புரட்சியாளர்களின் தீவிரமான உழைப்பிலேயே தங்கியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# அரசு [illegible]

அரசு என்பது ஓர் நிறுவனம். இது சமூகத்தில்

ஒழுங்கமைப்பது
நிர்வாகம் செய்வது
பொருளாதாரத்தை ஒழுங்கமைப்பது
தலையீடு செய்வது
தன்னைத் தானே பாதுகாப்பது

போன்ற கடமைகளை ஆற்றுகிறது.

இறுதியாய்வில், அரசு என்பது வன்முறை இயந்திரம். அது சமூகத்திலுள்ள மேலாதிக்க சக்திகளின் கருவியாக இருந்து நடப்பு ஒழுங்கைக் காத்து வருகிறது அல்லது அவர்களின் தேவைக்கேற்ப மாற்றி அமைக்கிறது.

அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடு குறித்து பொதுவாக காணப்படும் மயக்கங்கள்.

அரசின் பிரதான கூறுகள்
1. அரசாங்கம் (government)
2. அதிகாரத்துவம் (bureaucracy)
3. வன்முறை இயந்திரம் (violent machinery)

## அரசாங்கம்

பாராளுமன்றம், தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி / அரசுத் தலைவர் ஏனைய மக்கள் மன்றங்கள் போன்றவை அரசாங்கம் என்பதில் அடங்கும். இது அரசை சட்டபூர்வமாக்கும் (legitimized) காரியம் ஆற்றுகின்றது. மக்களின் ஒப்புதலை ஏதோ வகையில் பெற்றுக் கொடுக்கின்றது. ஆளும் வர்க்க நலன் பேணும் சட்டங்களை இயற்றி அவர்களுக்கு சேவையாற்றும்.

## அதிகாரத்துவம்

அரசின் பின்னின்று இயக்கும் பலமான பிரிவு இதுவாகும். பொதுவாக இப்பிரிவு ஆளும் வர்க்கங்களுக்கு சேவையாற்றி வந்தாலும் கூட, ஓரளவு சுயாதீன தன்மையையும் உடையதாகும். சில குறிப்பான நிலைமைகளில் இது அதிகளவில் சுயாதீன தன்மையுடன் செயற்பட்டு, ஒரு தனியான இருப்பாகவே மாறி நிர்ணயமான பாத்திரம் வகிக்கக்கூடியது.

## வன்முறை இயந்திரம்

இராணுவம், பொலிஸ், நீதிமன்றம் சிறைச்சாலை போன்றவை.

நீதித்துறை ஆளும் வர்க்க நலன்களை தாக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட பின்னர் அவற்றை பாதுகாத்து பேணும் செயலை வன்முறை இயந்திரம் ஆற்றுகிறது.

சமூகத்திலுள்ள மேலாதிக்க சக்திகள் பல்வேறு வழிகளினாலும் இந்த வன்முறை இயந்திரத்துடன் தொடர்புகொண்டு செயற்பட்டு அரசின் செயற்பாடுகள் மொத்தத்தில் தமது நலன்களை காப்பவையாக இருப்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்கின்றன.

## லொபிக்களும் (Lobbying groups) அழுத்தக் குழுக்கள் (Pressure groups)

லொபிக்கள் மற்றும் அழுத்தக் குழுக்களின் செயற்பாடுகளை புரிந்து கொள்ளாமல் நவீன முதலாளித்துவ அரசுகளைப் புரிந்து கொள்ள முடியாது. வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் பல்வேறு சக்திகளும் இவற்றின் மூலம் சட்டவாக்க அமைப்புகளை, தமது நலன்களை காக்கும் விதத்தில் செயற்படுத்துகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

## சிவில் சமூகம் குறித்து

அரசு பற்றிய நவீன மார்க்சிய விளக்கம் மேலும் விரிவானது. அரசையும் – சிவில் சமூகத்தை வேறுபடுத்திக் காட்டும் கிராம்ஸ்சியின் விளக்கம். அரசின் கூறாக வன்முறை இயந்திரத்துடன், சித்தாந்த இயந்திரமும் செயல்படுதல். சித்தாந்த அரசு இயந்திரம் பற்றிய அல்தூசரின் ஆய்வுகள் கவனத்திற்குரியவை.

## புரட்சிகர அரசும் – அது அதிகாரமயப்படலும் பற்றி

புரட்சியாளர்கள் அரசதிகாரம் இன்றி சமூகத்தை மாற்றியமைக்க முடியாது என்பதால் அரசதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது அவர்களது உடனடி இலக்காகிறது. இந்த அரசதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது சமூக மாற்றத்திற்கான கருவி என்ற வகையிலேயே அன்றி அரசைக் கைப்பற்றுவதே இறுதி இலக்காகி விடக்கூடாது என்பதில், விழிப்புணர்வு அவசியமாகிறது.

கடந்த காலத்தில் புரட்சிக்கு பிந்திய சமூகங்களில் அமைந்துள்ள அரசுகளும், கட்சிகளும் அதிகார வர்க்க மயமாகி மக்களின் நலன்களுக்கு துரோகமிழைத்த படிப்பினைகளும் முக்கியமானவை. இவ்வாறாக நடைபெறாது தடுக்கும் விதத்தில் அதிகாரங்களை மக்களிடம் திருப்பி ஒப்படைப்பதற்கான முயற்சிகளை தொடங்குவது அவசியம். விரிவான மக்கள் திரள் அமைப்பை உருவாக்கி, அவற்றிடம் அதிகளவில் அதிகாரங்களை கையளிப்பது இந்த நோக்கின் முதல் நடவடிக்கையாக இருக்கும். புரட்சிகர அரசானது மக்களை வழிநடாத்தும் போது வன்முறை இயந்திரத்தைவிட சித்தாந்த அரச இயந்திரத்தையே அதிகம் சார்ந்திருக்க வேண்டும்.

## பாராளுமன்ற வாதம் குறித்து

அரசியலில் பாராளுமன்றத்தின் பாத்திரத்தை புரிந்து கொண்டால் பாராளுமன்றத்தினூடாக அரச அதிகாரத்தை கைப்பற்றலாம் என்பது வெறும் ஏமாற்று. ஆனால் பாராளுமன்றத்தை பிரச்சார நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தலாம் என்ற கருத்தும் உள்ளது. பெரும்பாலும், நவீன காலத்தில் இது சாத்தியப்படுவதில்லை என்றே கொள்ள வேண்டும். குறிப்பாக 3ம் உலக நாடுகளில் பாராளுமன்ற வாதத்தினுள் இறங்குவது தற்கொலைக்கு ஒப்பானதே.

## ஒரு கட்சி ஆட்சி பற்றி

புரட்சிக்கு பிந்திய சமூகங்களில் ஒரு கட்சி ஆட்சிமுறை கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த ஒரு கட்சி ஆட்சிமுறையின், தோற்றம், கட்சி அதிகாரமயமாக்கப்படல் ஆகிய இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகும். மக்களிடம் ஜனநாயகத்தை விரிவுபடுத்துவது, அதிகாரத்தை பரவலாக்குவது என்ற நோக்கங்களுக்கு ஒரு கட்சி ஆட்சிமுறை எதிரானதாகவே உள்ளது.

## அரசு உலர்ந்து உதிர்வது பற்றி

கொம்யூனிச சமூகத்தில் வர்க்கப் பிரிவுகள், போராட்டங்கள் அற்றுப் போகும் போது, ஒடுக்குமுறை இயந்திரம் என்ற வகையில் அரசிற்கான தேவை இல்லாது போகிறது. அந்த வகையில் அரசு உலர்ந்து உதிர்ந்து விடும் என்று மார்க்சின் ஆரம்பக் கருத்தாக உள்ளது. இது பல நூற்றாண்டு மாற்றங்களுடன் தொடர்புடைய ஒரு விடயம்.

ஆனால் புரட்சிகர அரசானது அது உலர்ந்து உதிர்வதற்கான ஆரம்பக் கூறுகள் சிலவற்றையாவது தனது ஒவ்வொரு செயல்பாட்டிலும் உள்ளடக்க வேண்டும். அரசு இயந்திரம் பலப்படுவது, மக்களின் எல்லாவிதமான முன்முயற்சிகளையும், ஜனநாயக உரிமைகளையும் கட்டுப்படுத்த முனைவது, சிவில் சமூகத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் தலையிடுவது என்பது மேற்படி போக்கிற்கு முற்றிலும் எதிரானதாக அமையும்.



படிப்பகம்

www.padippakam.com

கட்சி என்பது ஒரு அரசியல் நிறுவனம் – நவீன சமூகத்தில் அரசும் சமூகமும் நெருக்கமாக செயல்படுகின்றன. எனவே, சமூகத்திலுள்ள பல்வேறு சக்திகளும் தமது நலன்களை காக்க வேண்டுமாயின் ஏதோ ஒருவகையில் அரசுடன் தொடர்பு கொண்டு செயல்பட வேண்டும். அந்த வடிவமே கட்சியாகும்.

குறிப்பிட்ட ஒரு சமூக சக்தியின் பிரக்ஞைபூர்வமான செயல்வடிவமே அதற்கான கட்சியாகும். கட்சி தனது கடமையை பிரக்ஞைபூர்வமாகவும் முரணின்றியும் நிறைவேற்ற அதற்கென ஒரு தத்துவம், திட்டம், மூலோபாயம், தந்திரோபாயம் என்பவை இருக்க வேண்டும்.

பல்வேறு சமூக சக்திகள் தமது நலன்களை காக்க போராடுதல். அதற்காக தமக்கென தனியான கட்சியை அமைத்துக் கொள்தல். அதன் மூலம் நடப்பு சமூகத்தை காப்பது அல்லது மாற்றியமைப்பது. சமூகத்தை புரட்சிகரமாக மாற்றியமைக்க முயலும் கட்சியே புரட்சிகர கட்சி எனப்படுகிறது.

பாட்டாளி வர்க்கம் என்பதற்கு பதிலாக புரட்சிகர சமூக சக்திகள் என்ற எமது பார்வை – எனவே பாட்டாளி வர்க்க கட்சி என்பது புரட்சிகர கட்சி என அழைக்கப்படுதல்

கட்சி வடிவங்கள்: 1. ஊழியர் கட்சி

2. வெகுசனக் கட்சி

சமூகத்தை மாற்றியமைக்க முனையும் புரட்சிகர கட்சியானது ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான முன்னணிப் படையாக இருக்க வேண்டுமாயின் அதன் பிரக்ஞைபூர்வமான பாத்திரம் மிகவும் உயர்வாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட சமூகத்தில் பிரக்ஞைபூர்வமான செயற்பாடுகளை உத்தரவாதப்படுத்துவதில் ஊழியர் கட்சியானது முதன்மையான பாத்திரத்தை ஆற்றுகிறது.

திட்டவட்டமாக வடிவமைக்கப்பட்ட, கடமைகளும் உரிமைகளும் வகுக்கப்பட்ட ஊழியர்களை தொடர்ச்சியாக உணர்வூட்டிப் பயிற்றுவித்து வேலைமுறைகளை உரியபடி வகுத்துக் கொடுத்து அங்கத்தவர்கள் தத்தமது வேலைகளை பரஸ்பரம் கண்காணித்து, மதிப்பீடு செய்து முன்னேறும் விதத்தில் வழிநடத்துவது இக்கட்சியின் கடமையாகும்.

ஜனநாயக மத்தியத்துவம் என்பது ஊழியர் கட்சியின் (carders party) அகவாழ்விற்கான அடிப்படையாகின்றது.

## கட்சியின் நிறுவன வடிவங்கள்-

கட்சி என்பது ஒரு குறிப்பிட்ட சமூக சக்திகளின் முன்னேறிய பிரிவினரின் விருப்பபூர்வமான இணைவில் உருவாவது. உறுப்பினர்களின் உணர்வு பூர்வமான பங்கு பற்றுதலுடன் கட்சி செயற்பட வேண்டும்.

ஜனநாயக மத்தியத்துவத்தை செயற்படுத்தும் வகையில் தாபனத்தின் வடிவங்கள் அமைந்திருக்க வேண்டும். கொங்கிரஸ், கட்சியின் அதி உயர் அதிகார வடிவமாகிறது.

கட்சியின் முழு அங்கத்தவர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் கொங்கிரஸ் கூட்டப்படுகிறது. இங்கு கட்சி வாழ்வின் முக்கியமான அம்சங்கள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன. அதாவது கட்சிக் கொள்கைகள், அமைப்பு விதிகள், தலைமை அமைப்புகள் தீர்மானிக்கப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டு கொங்கிரஸ்களுக்கு (மாநாடு) இடைப்பட்ட காலத்தில் கட்சியின் முக்கிய பணிகளை கட்சிக் காங்கிரஸ் வகுத்த கொள்கையின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்ல ஒரு மத்திய குழு தெரிவு செய்யப்படுகிறது. நிர்வாக மத்திய குழு ஒரு விரிவான அமைப்பு என்பதால் அதன் அன்றாட நிர்வாக செயற்பாடுகளை இலகுவாகவும், வேகமாகவும் ஆற்றும் வகையில் ஒரு செயற்குழுவானது (executive committee) மத்திய குழுவினால் தெரிவு செய்யப்படுகிறது.

மத்திய குழுவின் கீழ் பல்வேறு பிராந்திய குழுக்கள், கிராமக் குழுக்கள் போன்றனவை அமைகின்றன. அமைப்புகளுக்கிடையில் ஜனநாயக மத்தியத்துவம் – மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் என்ற வடிவில் பின்பற்றப்படுதல்.

கட்சி என்பது சமூகத்தில் முன்னேறிய பிரிவினர்களை கொண்ட முன்னணிப் படையாகும். ஆனால் புரட்சி என்று வரும் போது வெகுஜனங்களின் விரிவான பங்குபற்றுதலுக்கு கட்சியின் திட்டங்களும் செயற்பாடுகளும் இடமளிக்க வேண்டும். இதற்கென தளர்வான வெகுஜன அமைப்புகளும் அவசியமாகின்றன.

இதை தவிர குறிப்பான சமூக பிரச்சினைகளை முன்னெடுக்கையில் அதற்கென பிரத்தியேகமான முன்னணி அமைப்புகளும் தேவை. (பெண்ணிய அமைப்புகள், மாணவர் அமைப்புகள், விவசாயிகள் அமைப்புகள், தொழிலாளர் அமைப்புகள், சாதிய, பிரதேச வேறுபாட்டை எதிர்க்கும் அமைப்புகள்)

கட்சிக்கும் இவ்வமைப்புகளுக்குக்கும் இடையிலான உறவு, வெறும் பயன்படுத்தல் என்பதாக இருத்தல் ஆகாது. மக்கள் தமது விரிவான ஜனநாயக உரிமையை பாவிப்பதற்கு உற்சாகப்படுத்தி, அவர்களின் ஆற்றலை சமூக மாற்றம் நோக்கி குவிப்பதாக இருக்க வேண்டும்.

## கட்சியும் கட்சி இராணுவமும்

ஒடுக்குமுறை அரசுக்கு எதிரான போராட்டம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது என்பதில் புரட்சிகர இராணுவத்தின் பாத்திரம் – தீர்க்கமானது. கட்சியின் முக்கிய அமைப்பாகிறது.

இராணுவம் தனியாக செயல்படவும் தன்னளவில் அதிகாரமயப்படுவதற்கான வாய்ப்பு அதிகம் என்பதால் – எப்போதும் புரட்சிகர அரசியலை அதிகாரத்தில் வைப்பதும் பிரதானமாகிறது.

எமது போராட்ட வரலாற்றில் இராணுவப் பிரிவுகளின் இந்த விதமான போக்குகளை படிப்பினையாகக் கொள்தல். அவற்றை தவிர்க்குமுகமாக தற்காப்பு பொறிமுறைகளின் அவசியம்.

கடந்த கால வரலாற்றில் கட்சிகள் அதிகாரமயப்பட்ட போக்குகளை படிப்பினையாகக் கொள்ளல். நிறுவனங்கள் என்பது, அவை எவ்வகையான நிறுவனங்கள் என்றாலும் எப்போதும் ஒரு அதிகார அமைப்பு என்பதை கருத்தில் கொள்ளல்.

பலரின் திரட்சியும், உணர்வுபூர்வமான . செயற்பாடுகளும், மையப்படுதலும் அதிகாரத்தைப் பெறும் நிலைக்கு இட்டுச் செல்பவை. ஒருவகையில் அது அவசியமானதும் கூட. ஆனால் எதிர்நிலையாக இந்நிறுவனம் அதிகாரத்துவமாவதும் நடைபெற்று விடுகின்றது. இதனை தவிர்க்கும் வகையில் கட்சி எப்போதும் விழிப்பாக செயற்படல். கட்சி தன் உறுப்பினர்களை தமது விரிவான அளவில் தமது ஜனநாயகத்தை பயன்படுத்துமாறு உற்சாகப்படுத்தல். அதற்கான நடைமுறைகளையும் கட்சி பேணல். கட்சிக்கும் மக்களுக்கும் இடையில் நெருக்கமானதும் காத்திரமானதுமான உறவைப் பேணுதல். முடிந்தவரையில் குறிப்பிட்ட தனிநபர்கள், குழுக்களின், அமைப்புகளின் கையில் அதிகாரம் குவிவதை தவிர்த்து அதிகாரத்தை அமைப்பினுள்ளும் மக்களுடனும் பகிர்ந்து கொள்வதில் முனைப்பாக இருத்தல்.



படிப்பகம்

www.padippakam.com

## புரட்சிகர கட்சியும் அதிகாரத்தைக் கைப்பற்றுதலும்

புரட்சிகர மாற்றங்களை நிகழ்த்தும் நோக்கில் மட்டுமே, கட்சி அதிகாரத்தை கையேற்கின்றது. தான் கையேற்ற அதிகாரத்தின் துணை கொண்டு சமூக மாற்றம் என்ற இலக்கை முனைப்பாக முன்னெடுத்தல் – அரசு தானே ஒரு தனியாக இருப்பாக ஆவதையோ, அதன் ஆரம்ப இலக்குகளை தவறவிட்டு அரசு இறுகிப் போய்விடுவதையோ கட்சி அனுமதிக்கக் கூடாது. அரசானது கட்சியின் முழு ஆற்றலையும் சிதைத்து விடக் கூடியது என்பதில் விழிப்பாக இருக்க வேண்டும். எக்கணமும் அதிகாரமயப்படுத்தலுக்கு எதிராக கட்சி தீவிரமாக போராடுதல் – அரசு அதிகாரத்துவ ரீதியில் பலப்படுத்தப்படாத வகையில் படிப்படியாக மக்களிடமே அதிகாரத்தை பகிர்ந்து கொடுத்தல். எப்போதும் கட்சி இவ்விடயங்களில் பிரக்ஞை பூர்வமாக செயற்பட வேண்டும்.

## கட்சி – கட்சி உறவு பற்றி

– புரட்சிகர கட்சிக்கும் அதே சமயம் அதே நாட்டில் சொந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஏனைய கட்சிகளுக்குமிடையிலான உறவு

– சர்வதேச ரீதியில் ஏனைய கட்சிகளுடனான உறவு

சர்வதேச அளவில் கட்சிகளுடனான உறவு என்பது அடிப்படையில் இரண்டு ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கிடையிலான உறவாக அமைவது. அந்தந்த ஒடுக்கப்பட்ட மக்களை பிரதிநித்துவம் செய்பவை என்ற வகையில் இவ்வுறவு அமைகிறது. சம்பந்தப்படும் கட்சிகள் பெரியவை, சிறியவையாக இருந்தாலும் அவற்றிற்கிடையில் ஜனநாயகம், சமத்துவம் என்பவை பேணப்படல் அவசியம்.

ஒவ்வொரு கட்சியிலும் உட்கட்சி விவகாரங்கள், உட்கட்சிப் போராட்டம் தொடர்பான விவாகாரங்களில் ஏனையவை தலையிடாமல் இருப்பதை அங்கீகரித்தல் அவசியம்.

கடந்த கால எமது போராட்ட அனுபவங்களிலும் சர்வதேச அளவிலான புரட்சிகர அமைப்புகளின் கட்டமைப்புகளிலும் ஆரோக்கியம் நிலவவில்லை என்பது இங்கு குறித்துக் காட்டப்பட வேண்டியதாக உள்ளது.

## புரட்சிகரக் கட்சியும் சமூக மாற்றமும்

எந்தவொரு புரட்சிகரக் கட்சி மேற்கொள்ளும் சமூக மாற்றத்துடனும் சர்வதேச அளவிலான புரட்சிகர மாற்றம் இணைந்ததாகவுள்ளது. எமது சொந்த போராட்ட வெற்றிக்கும் இது அவசியமாகும். நாம் எதிர்த்து போராடும் எதிரி – ஏகாதிபத்தியம் – உலகளாவிய அமைப்பு என்ற வகையில் அதனை முறியடிப்பதற்கான முயற்சிகளும் உலகளாவிய அளவில் ஒன்றிணைக்கப்படுவது அவசியமானது. இது குறிப்பாக ஒரு நாட்டில் புரட்சி வெற்றி பெறுவதற்கும், இந்த வெற்றியை உலகளவில் அடுத்தடுத்த வெற்றிகளின் மூலம் பலப்படுத்துவதற்கும் அவசியமானது. இந்த விதத்தில் புரட்சிகர சக்திகள் தமது கோட்பாட்டு, அரசியல் தார்மீக, பொருள்வகை வளங்களைக் கூட பரிமாறிக் கொள்வதும் சர்வதேசியத்தின் பாற்பட்ட கடமையாகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

# ஜனநாயகம்

## ஜனநாயகம் குறித்து

ஜனநாயகம் என்பதன் தாற்பரியம் குறித்து விரிவான விளக்கம் என்னவெனில், மக்கள் இறைமை உள்ளவர்கள் என்பதும், தம்மைத் தாமே நிர்வகித்துக் கொள்ளக் கூடியவர்கள் என்பதும் இதன் அடிப்படையாகிறது.

மக்களின் இறைமை, உரிமைகள், கடமைகள், அவர்களின் பங்குபற்றுதல், சுதந்திரமாக தமது கருத்துக்களை வெளிப்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்கிய விரிவான கருத்தாக்கமே ஜனநாயகம். முதலாளித்துவ அமைப்பானது ஜனநாயகத்தை வெறுமனே தேர்தலில் வாக்களிப்பதாக குறுக்கும் போதும்; புரட்சிகர சக்திகள் மக்கள் மீது அதிகார நடைமுறைகளை கையாளும் போதும்; இவர்கள் ஜனநாயகத்தின் உண்மையான தாற்பரியத்தை புரிந்து கொள்ளவில்லை என்ற அர்த்தமாகும்.

## ஜனநாயகமும் நிறுவனங்களும்

எப்போதும் ஜனநாயகம் என்பதை நிறுவனங்களுடன் இணைத்தே புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. ஜனநாயகத்தை செயற்படுத்த நிறுவனங்கள் அவசியம். நிறுவனங்கள் எனும் போது அங்கு மையப்படுத்தல் என்பது இயல்பாக அமைகிறது. இதன் காரணமாக ஜனநாயகம் என்பது ஒரு வரையறை கொண்டதாகிறது.

## கட்சியும் ஜனநாயகமும்

கட்சி என்பது அங்கத்தவர்கள் தமது சுயவிருப்பின் பேரில் இணைந்து கொள்ளும் ஒரு வடிவம். கட்சி அங்கத்தவர்கள் செயலூக்கத்துடன் பணியாற்றும் வகையில் அங்கத்தவர்களும், கட்சியும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் என்ற ஜனநாயக வழிமுறை இருக்க வேண்டும். இது ஜனநாயக மத்தியத்துவம் எனப்படுகின்றது.

சாதாரண அர்த்தத்தில் ஜனநாயகமும், மத்தியத்துவமும் ஒன்றுக்கொன்று எதிரானதாகத் தோன்றலாம். அனைவரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் ஜனநாயக உரிமை என்பது தவிர்க்க முடியாதவாறு, தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுள் பெரும்பான்மையானவர்களால் சரியென ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தை, அனைவரும் சேர்ந்து செயற்படுத்தும் கடமையையும் – மத்தியத்துவத்தையும் – உள்ளடக்குகிறது.

மத்தியத்துவம் எனும் போது முதலில் கருத்துக்களை மத்தியத்துவப்படுத்தல் பிரதானமாகிறது. இது விரிவான ஜனநாயகம் இன்றி சாத்தியப்பட மாட்டாது. இவ்வகையில் ஜனநாயகமும் மத்தியத்துவமும் நேரடியாக ஒன்று கலக்கின்றது. முடிவுகள் எடுக்கப்படும் போது ஜனநாயகமும் செயற்படும் போது மத்தியத்துவமும் செயலுக்கு வருகிறது. கூட்டாக முடிவெடுப்பதும் தனிநபர்கள் பொறுப்பேற்று செயற்படுத்துவது பின்னர் பொறுப்பேற்றவர் பதில் சொல்வதும் நடைமுறையாக அமைகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

கட்சிக்கும் மக்களுக்குமான உறவில் ஜனநாயகம் வெளிப்படுவது அவசியமாகும். மக்கள் தமது நிலையை புரிந்து கொள்ளக் கூடியவர்கள். சமூக மாற்றத்தை ஏற்று அதில் ஊக்கமாக ஈடுபடக்கூடியவர்கள் என்ற விளக்கம் பரந்துபட்ட மக்களது அறிவாற்றலிலும், அவர்களது புரட்சிகர செயலாற்றலிலும் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து செயற்படுவது பிரதானமானதாகும். மக்கள் மீது அதிகாரம் பிரயோகிக்கும் அமைப்பாக கட்சி ஒருபோதும் இருத்தலாகாது.

முன்னணிப்படை என்ற வகையில் கட்சியானது மக்களுக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர ஒருபோதும் அதிகாரம் செலுத்தலாகாது. மக்கள் மீது சித்தாந்த மேலாண்மையை நிறுவி மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பதிலாக நிர்வாக அதிகார முறைகளை கொண்டு செயற்படக் கூடாது.

## ஜனநாயகத்தில் கவனிக்க வேண்டிய சில அம்சங்கள்

ஜனநாயகத்தை வெறும் எண்ணிக்கை வகைப்பட்டதாக குறுக்கிப் பார்ப்பது தவறு. இது வெவ்வேறு நிலைமைகளில் பல தவறுகளுக்கும் இட்டுச் செல்லும் என்பதால் பண்பு வகையாகவும் ஜனநாயகத்தை கருத வேண்டும். உதாரணமாக சிறுபான்மை சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில் பெரும்பான்மை சமூகமானது எண்ணிக்கை பெரும்பான்மையை மட்டும் கொண்டு அனைத்து ஒடுக்குமுறை சட்டங்களையும் ஜனநாயகத்தின் பேரில் நிலை நாட்ட முடியும்.

இவ்வாறே கட்சியிலும் முரண்பட்ட கருத்துகள் தோன்றும் போது வெறும் எண்ணிக்கை பெரும்பான்மையை கொண்டு முடிவுகளை எடுக்கப்படாமல் விரிவான அளவில் விவாதங்கள் நடாத்தப்பட வேண்டும். இதன் மூலம் முரண்பட்டு மோதும் இருதரப்புக் கருத்துக்களையும் அங்கத்தவர்கள் ஆழமாக புரிந்து கொண்டு அவை தொடர்பான தமது நிலைப்பாடுகளை எடுப்பதும், தமது முடிவுகளின் விளைவுகளை தொடர்ந்து மதிப்பிடுவதும் நடைபெற வேண்டும். இதற்கு மாறாக குறுக்கு வழிகளில் ஒரு கருத்துக்குச் சாதகமாக நபர்களாக வென்றெடுக்க முனைவது நீண்ட காலத்தில் அமைப்பிலுள் நம்பிக்கையின்மையையும் பரஸ்பரம் பல சந்தேகங்களையும் தோற்றுவிக்கும். இது கூட்டு வேலை முறைக்கு குந்தகமாக அமையும்.

## புரட்சிகர இராணுவத்தில் ஜனநாயகம்

பூர்சுவா இராணுவம் ஒரு ஒடுக்குமுறை இயந்திரம். இன்று சமூகத்தில் உள்ள மேலாண்மை சக்திகள் இதனைக் கொண்டு சாதாரண மக்களை ஒடுக்குகிறது. ஆனால் இராணுவத்தில் உள்ளவர்களில் பெரும்பான்மையினர் வறிய ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவுகளில் இருந்து வந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு இராணுவத்தில் ஜனநாயகம் வழங்கப்படுவதை மேலாதிக்க சக்திகள் அனுமதிப்பதில்லை. முற்றிலும் ஒரு இயந்திரமாகவே இராணுவம் பேணப்படுகிறது.

ஆனால் புரட்சிகர இராணுவத்தில் நிலைமைகள் வேறுவிதமானது. அது தனது சொந்த ஒடுக்கப்படும் மக்களுக்காகவும், தனக்காகவும் போராடுகிறது. எனவே ஜனநாயகம் என்பது இங்கு இயல்பாக அமைகிறது. புரட்சிகர பணிகளை பகிர்ந்து கொள்ளும் ஒரு பிரிவு என்ற வகையில் இங்கு ஜனநாயக வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

இருப்பினும், இராணுவமானது ஒன்றிணைக்கப்பட்டு ஒரே அமைப்பாக செயற்படுவது என்ற வகையில் அங்கு உயர்ந்தளவில் மத்தியத்துவம் அவசியமாகின்றது. மாறிவரும் நிலைமைகளில் வேகமாக முடிவெடுத்து தீர்க்கமாக செயற்பட வேண்டியிருப்பதால் இவ்வாறான மத்தியத்துவம் அவசியமாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

## ஜனநாயகம், தனியாகவும் கூட்டாகவும்

ஜனநாயகம் என பொதுவாக பேசப்பட்டாலும் தனிநபர் ஜனநாயகம், சமூகத்தின் கூட்டு மொத்த ஜனநாயகம் (collective democracy) என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகளைக் குறித்துக் கொள்ள வேண்டும். அனைத்து மக்களையும் ஒரு அலகாக எடுத்து, அதற்குள் உள்ள ஜனநாயகத்திற்கு உட்பட்டதாகவே தனிநபர் ஜனநாயகம் அமைகிறது.

தனிநபர் ஜனநாயகம் என்பது ஒட்டுமொத்த ஜனநாயகத்திற்கு உட்பட்டதாக அமையும் போதே அர்த்தம் பெறுகிறது. ஏனெனில், முழு சமூகத்திற்கும் விரோதமான ஒரு செயலை தனிநபர் ஜனநாயகம் என்ற பெயரில் ஒருவர் செய்ய முடியாது. முழுமக்களின் ஜனநாயகம் என்பதை தொடக்க புள்ளியாக கொண்டுதான் தனிநபர் ஜனநாயகம் மீறப்படுவது என்ற பிரச்சினை அணுகப்பட வேண்டும்.

அதே வேளை கூட்டு ஜனநாயகம் என்ற பெயரில் தனிநபர் அடிப்படை உரிமைகள் அத்துமீறப்படுவதையும் அனுமதிக்க முடியாது. மாறாக, தனிநபர் ஜனநாயகத்தின் தொகுப்பே கூட்டு ஜனநாயகம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

## எதிர்காலத்தில் ஜனநாயகம் பற்றி

தொடர்ச்சியாக ஒடுக்கப்பட்டு வந்த சமூகங்கள் புரட்சியின் மூலம் ஆட்சி அதிகாரத்தை கையேற்கும் போது தம்மை ஒடுக்கிய சக்திகளை நசுக்க வேண்டியுள்ளது. இதற்கு அரசின் வன்முறை இயந்திரத்தை ஓரளவு பிரயோகிப்பதும் தவிர்க்க முடியாததாகிறது. இக்கடமை ஓரளவிற்கு நிறைவு பெறும்போது தொடர்ந்து மக்களிற்கு விரிவான ஜனநாயகத்திற்கான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். இதன் மூலமே கட்சியானது மீண்டும் மக்களை நசுக்கும் கருவியாக மாறுவதை தடுக்க முடியும். இதனைக் கட்சி பிரக்ஞைபூர்வமாக செய்ய வேண்டும்.

புரட்சிகர பணிகள் எவ்வளவு முக்கியத்துவமுடையதாக இருந்தாலும் அவை மக்களுக்கு புரியவைத்தே மேற்கொள்ளப்பட வேண்டும். திணிப்புகள் மூலம் இவற்றை சாதிக்க முடியாது. மக்கள் மீதான நம்பிக்கை இங்கு பிரதானமாகிறது. ஒரு உயர்ந்த சமுதாயத்தை கட்டியமைக்க மக்களின் பௌதீக, ஆன்மீக ஆற்றல்களை வெளிக் கொணர்வது அவசியமாகிறது. செயலூக்கமான ஜனநாயகத்தை மறுத்து விட்டு இதனை நிர்ப்பந்தங்களால் செய்ய முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

# சித்தாந்தம்
# (Ideology)

சித்தாந்தம் என்பது மனிதர்களிடத்தில் காணப்படும் கருத்துக்கள், நம்பிக்கைகள், விழுமியங்களின் தொகுப்பாக உருப்பெறுவதாகும். சித்தாந்தம் மூலமே மனிதர்கள் சமூக உறவுகளை மேற்கொள்கின்றனர். எனவே மனித சமுதாயத்திற்கு இது அவசியமாகிறது.

வெவ்வேறு சமூகப்பிரிவுகள் தமது நலன்கள் சார்ந்து வேறுபட்ட சித்தாந்தங்களைக் கொண்டிருத்தல். ஒடுக்குமுறை நிலவும் சமுதாயத்தில் ஆதிக்க சக்திகளின் சித்தாந்தம் மேலாதிக்கம் செலுத்தல்.

## சித்தாந்தம், கோட்பாடு என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு

முறையான விஞ்ஞான பூர்வமான கருத்துக்களில் இருந்து உருவாவது கோட்பாடு – இது மிகவும் இறுக்கமானது.

சித்தாந்தம் என்பது வேறுபட்ட, ஒன்றுக்கொன்று முரணான, மிகவும் தளர்வான கருத்துக்கள் மூலம் உருவாகிறது. கோட்பாட்டை போல இறுக்கமானதாக இல்லை என்பதால் இது அரசியல் ரீதியாக ஒன்றுக்கொன்று எதிரான நிலைப்பாடுகளுக்கும் இட்டுச் செல்லக்கூடியது.

பொதுவாக சித்தாந்தங்கள் நடுநிலையானவை அல்ல. ஆயினும் வெகுசன சித்தாந்தங்கள் (popular ideology) போன்றவை நடுநிலையானவையாகவும் இருக்க முடியும். இவை தம்முடன் இணையும் வேறு சித்தாந்தங்களின் தன்மையை பொறுத்து முற்போக்காகவோ, பிற்போக்காகவோ மாறலாம்.

உ+ம்: தேசியவாதம் ஒரு வெகுசன சித்தாந்தம் ஆகும். இது ஆதிக்க சக்திகளின் சித்தாந்தங்களுடன் இணையும் போது பிற்போக்கு தேசியவாதமாகிறது. புரட்சிகர சித்தாந்தங்களுடன் இணையும் போது முற்போக்கு சித்தாந்தமாகிறது.

எனவே பொதுவாக வெகுசன சித்தாந்தங்கள் என்பவை தன்னளவில் முற்போக்கானதோ பிற்போக்கானதோ அல்ல.

சித்தாந்தம் தொடர்பாக மார்க்சியவாதிகளிடம் காணப்படும் இரண்டு விதமான கருத்துக்கள்

1. சித்தாந்தத்தில் பிரதிபலிப்புக் கோட்பாடு

2. சித்தாந்தத்தில் பொருள்வகை தன்மைபற்றிய கோட்பாடு



படிப்பகம்

www.padippakam.com

## பிரதிபலிப்பு கோட்பாடு

அடித்தளம் மேற்கட்டுமானம் என்பவற்றிற்கிடையிலான உறவை மிகவும் குறுகிய விதத்தில் புரிந்து கொள்ளும் குறுக்கல்வாத விளக்கங்கள், சமூக உருவாக்கத்தை பொருளாதாரமாக சாரம்சப்படுத்தி விடுகிறது. அடித்தளமான பொருளாதாரத்தை வெறுமனே பிரதிபலிப்பதே மேற்கட்டுமானத்தைச் சார்ந்த சித்தாந்தத்தின் பணி என்றாகிறது. இதன் மூலம் சித்தாந்தத்தின் குறிப்பான தாக்கம் நிகழ்த்தும் தன்மை நிராகரிக்கப்படுகிறது.

## பொருள்வகை தன்மை பற்றிய கோட்பாடு

மேல்கட்டுமானங்களின் சுயாதீன தன்மையையும் அவை பரஸ்பரம் தாக்கம் நிகழ்த்துவதையும் அங்கீகரிக்கிறது. அவை மேலாதிக்க கட்டமைப்பாகவும் வரலாம் என்பதையும் ஏற்றுக் கொள்கிறது.

அதாவது சித்தாந்தம் என்பது வெறும் நம்பிக்கை மாத்திரம் அல்ல. அது மக்களுக்கு நம்பிக்கையூட்டி திட்டவட்டமான செயற்பாட்டுக்கு வழி வகுக்கிறது. மக்களை கருத்துக்கள் பற்றிக் கொண்டால் அது சக்தியாக உருவெடுக்கும் என்ற மார்க்சின் கூற்றிலிருந்து அதனை புரிந்து கொள்ளலாம்.

சித்தாந்தம் குறித்த மார்க்சிய கருத்துக்கள் வரலாற்று பூர்வமாக விரிவாக வளர்ச்சியடைந்துள்ளன. ஆரம்ப காலத்தில் மார்க்சின் கருத்துக்களில் சித்தாந்தம் பற்றிய எதிர்மறையான மதிப்பீடுகள் இருந்ததாக கருதப்படல். அதாவது சித்தாந்தம் என்பது ஒரு தவறான பிரக்ஞை என்பதாகக் கருதப்படல்.

லெனினுடைய காலத்தில் சோசலிச சித்தாந்தம் பற்றி ஏராளமாக பேசப்பட்டது. பின்பு கிராம்ஸி தனது காலத்தில் பாசிசத்தின் தோற்றம், அந்த மேலாதிக்க சித்தாந்தத்தினால் பாட்டாளி வர்க்கம் அள்ளிச் செல்லப்படுவதைக் கருத்தில் கொண்டு சிவில் சமூகம், சித்தாந்த மேலாண்மை, சித்தாந்த கூட்டு (ideological block) போன்ற கருத்தாக்கங்களை முன்வைத்து அதனை விளக்குகின்றார்.

இதனை ஒட்டி அல்தூசரது சித்தாந்தம் பற்றிய விளக்கத்தை மேலும் விரிவாக எடுத்துக் கொள்கின்றனர். அதிகாரம், சித்தாந்தம், மொழி, தன்னிலை போன்றவற்றிற்கிடையிலான உறவுகளை இவர் விளக்குகின்றார்.

அதிகார நலன்கள் சித்தாந்தம் மூலம் வெளிப்படுவதாகவும் இச்சித்தாந்தம் மொழியில் தனது தடங்களை பதித்துச் செல்வதாகவும், மொழி தன்பங்குக்கு தனிநபர்களின் தன்னிலையை கட்டமைப்பதாகவும் இதன் மூலம் அதிகார நலன்களுக்கு ஏற்ற வகையில் தன்னிலை கட்டமைக்கப் படுவதகாவும் இதன் மூலம் தனிமனித செயற்பாடுகள் என்பது சமூகத்திலுள்ள அதிகார கட்டமைப்பை மீண்டும் உறுதி செய்வதாகவும் இருப்பதை மார்க்சியவாதிகள் விளக்குகின்றனர்.

சித்தாந்தம் பற்றிய கருத்துக்கள் நாம் இன்னும் விரிவாக ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# புத்திஜீவிகள் பற்றி (Intellectuals)

புத்திஜீவிகள் என்ற தமிழ் பதத்தையும் அத்துடன் இது தாங்கி நிற்கும் கருத்துக்களையும் கேள்விக்குள்ளாக்குதல்.

சிலரை மட்டும் புத்தியுள்ளவர்களாக வகைப்படுத்தி ஏனையவர்கள் புத்திகுறைவானவர்களாக கருதும் ஒரு தன்மையையும் இப்பதம் தமிழில் கொண்டுள்ளது. எமது சமூகத்தில் இப்பதம் உருவாகும் விதம் கொலனித்துவ காலகட்டத்தில் ஒரு சிறிய மேட்டுக்குடி சமூகப் பிரிவினர் கல்வி கற்று வந்து உயர் சமூக அந்தஸ்துகளை பெற்று தம்மை புத்திஜீவி வகையினராக வெளிப்படுத்தியதுடன் இப்போக்கு ஆரம்பிக்கிறது. இப்பதம் இன்று ஒரு மேட்டுக்குடிப் பிரிவினரை உருவாக்கி அவர்கள் அதனை வலிந்து பேண முயலும் போக்காகவும் இதனைப் பார்க்க வேண்டியுள்ளது.

இன்றைய நிலையில் நாம் இதனைப் பாவிப்பதையும் கேள்விக்குள்ளாக்க வேண்டிய அவசியமாகிறது. இன்று ஐரோப்பிய சமூகத்திலும் இப்பதம் பொதுவாக பயன்படுத்தப்படுவதில்லை.

சமூகத்திலுள்ள பல்வேறு விடயங்களை விளங்கிக் கொள்ள ஒரு முறையான கற்றல் அவசியம். ஆனால் இதனை சமூகத்தின் சில மேட்டுக் குடியினர் வசம் விட்டு விடுவதில் ஏற்பட்ட விடும் சிக்கல்கள் பற்றி நாம் கவனமாக இருத்தல் வேண்டும்.

பொதுவாக புத்திஜீவி எனப்படுவோராக, பல்கலைக்கழகங்களில் சிறப்புப் பட்டங்கள் பெற்றவர்களை மட்டுமே கருதப்படுகின்றது. இந்த வழமை கேள்விக்குள்ளாக வேண்டியுள்ளது. ஏனெனில்;

குறிப்பிட்ட ஒரு துறையில் பட்டம் பெறும் ஒருவர் சமூகத்திலுள்ள எல்லா விடயங்கள் தொடர்பாகவும் தனக்கு எல்லாம் தெரியும் எனப் பாவனை பண்ணுதலும், அதனை சமூகமும் ஏற்றுக் கொள்ளுதல் என்ற தவறான போக்கும் உள்ளது.

குறிப்பிட்ட துறையில் பட்டம் பெற்ற ஒருவர் அத்துறை தொடர்பாக கருத்துக் கூறும் போது கோட்பாட்டுச் செயற்பாட்டினூடாகவோ அல்லது ஒரு சீரிய சிந்தனையின் பின்னோ அல்லாமல் மேலோட்டமாக பொதுப்புத்தி மட்டத்தில் கருத்துச் சொல்லும் தவறான போக்கு.

முன்பு கோட்பாட்டு செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்த ஒருவர் தற்போது அம்முயற்சிகள் எதுவுமில்லாமல் முற்றிலும் பொதுப்புத்தி மட்டத்தில் பேசும் போக்கும் உள்ளது.

மேற்படி அர்த்தத்தில் பட்டம் ஏதும் பெறாத ஒருவர் குறிப்பிட்ட துறையில் விரிவாக கற்று பல கோட்பாடுகளை உருவாக்குபவராக மாறுகிறார். ஆனால் அவரது கோட்பாடுகளை பட்டம் பெறாதவர் என்பதற்காக நிராகரிக்கும் ஒரு போக்கு எமது சமூகத்தில் நிலவுதல்.

மேற்படி காரணங்களை வைத்துப் பார்த்தால் பட்டம் பெற்றவர்கள்தான் புத்திஜீவிகள். அவர்கள் கூறுவதுதான் கோட்பாடு என்ற இக்கருத்தானது கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியுள்ளது. இது அவசியமானதும் கூட.



படிப்பகம்

www.padippakam.com

நாம் உண்மையான கோட்பாட்டுச் செயற்பாடு, முறையான ஆற்றல் என்பதை ஏற்றுக் கொள்வோமாயின், பட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் யார் கோட்பாட்டுச் செயற்பாட்டினூடாக கருத்துக்களை முன்வைக்கின்றார்களோ அவர்களின் கருத்துகள் பரிசீலிக்கப்பட வேண்டியதாக உள்ளது. அப்படியானவர்களைக் கூட புத்திஜீவிகள் என வகைப்படுத்தி தனியான சமூகம் பிரிவினராக்குவது சர்ச்சைக்குரியதாகவே உள்ளது.

இந்தப் பின்னணியில் அறிவு என்பதற்கும் அதிகாரம் என்பதற்கும் இடையிலான உறவு பற்றியும் நாம் பரிசீலிக்க வேண்டும். உயர் தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய உலகில் அறிவு என்பதற்கும், அதிகாரம் என்பதற்கும் இடையிலான உறவு பற்றியம் நாம் பரிசீலிக்க வேண்டும்.

தொழில்நுட்பம் ஆதிக்கம் பெற்றுள்ள இன்றைய சமுதாயத்தில் அறிவு என்பது கூட ஒருவித அதிகாரமாகி விடுகிறது. அறிவை தனிச் சொத்தாக பேணுதல், அதனைக் கொண்டு ஏனையவர்களை ஒடுக்கும் போக்குகள் இன்று நிலவுகிறது. இந்நிலையில் புத்திஜீவிகள் எனப்படுபவர்களும் இதே ஆதிக்க உறவுகளை பேண விழைகின்றார்கள் என்பதையும் பார்க்க வேண்டியுள்ளது.

புத்திஜீவிகள் எனப்படுவோர் சமூகத்தில் மேற்கொள்ளும் எமாற்று வேலைகளை கருத்தில் கொள்ளல். உண்மையில் சமூகத்தில் உள்ள முன்னேறிய பிரிவினர் பலரும் கோட்பாட்டுப் பணிகளில் ஈடுபடக் கூடியவர்களே என்றவகையில் அவர்களுக்கும் புத்திஜீவிகள் எனப்படுவோர்க்கும் இடையே அறிவார்ந்தரீதியாக பாரிய வேறுபாடுகள் இல்லை. ஆனால் இந்த இடைவெளியை பெரிதாக்கி பேணுவதன் மூலம் ஒருவகை குரு – சிஷ்ய முறையை தக்க வைப்பதும் நடைபெறுகிறது.

முன்னேறிய பிரிவினர் மத்தியில், கோட்பாட்டு உழைப்பு தொடர்பாக காணப்படும் நம்பிக்கையீனம் முதலில் களைந்தெறியப்பட வேண்டியிருப்பதுதான் அவசியம். முன்முயற்சிகளில் தாமே ஈடுபடாமல் கோட்பாட்டுப் பணிகளை புத்திஜீவிகள் எனப்படுவோரை நோக்கித் தள்ளும் போக்கு நிறுத்தப்பட வேண்டும்.

எனவே, கோட்பாடுப் பணி என்பது ஒரு முறையான சிந்தனை செயல்பாடு என்பதைப் புரிந்து கொண்டு முன்னேறிய பிரிவினர் தமது சொந்த முயற்சிகளில் தாம் ஈடுபட வேண்டும். குறிப்பாக சமூகப் புரட்சியை முன்னெடுப்பவர்கள் என்ற வகையில் இது எமது கடமையாகிறது.

சமூகத்தில் உள்ள புத்திஜீவிகள் எனப்படுவோரை என்ன செய்வது என்ற பிரச்சினை. பல்வேறு குறைபாடுகளையும் உடைய இவர்களை திட்டித் தீர்ப்பதில் பயனில்லை. இது சில வேளை கோட்பாட்டுப் பணிகளே தேவையற்றவை என்ற அளவிற்கும் போய்விடுகிறது. மேற்படி நபர்களை குறிப்பிட்ட துறைகளில் ஈடுபடுத்தி, முடியுமான பயன்பாட்டை பெறுவது. முடியாத பட்சத்தில் விட்டுவிடுவது. இங்கு அவர்களை நாம் புரட்சியாளர்களாக கருத வேண்டியதில்லை. புரட்சியாளர்களே தேவையானளவுக்கு கோட்பாட்டுப் பணிகளில் முனைப்பாக ஈடுபடுவது இங்கு அவசியம். இதன் மூலம் இந்த புத்திஜீவிகள் எனப்படுவோரையே அந்தந்தத் துறைகளில் கேள்விக்குள்ளாக்க முடியும். இதுவே இன்றைய நிலைமைக்கு ஒரு மாற்றாகவும் அமையும்.

தொகுப்பாகப் பார்த்தால் புத்திஜீவிகள் என்ற கருத்தாக்கம் ஒருவகை ஐதீகமே. கல்விகற்ற மேட்டுக்குடி வலிந்து தமக்கென உயர் அதிகாரத்தை சமூகத்தில் பெற்றுக் கொள்வது, அதனைத் தொடர்ந்து பேண முயற்சிப்பது. அறிவு என்பது கொடையோ தனிச்சொத்தோ அல்ல. அதனை எவரும் முனைந்து பெற்றுக் கொள்ள முடியும். அறிவு அதிகாரத்திற்கான கருவியாவதை நிராகரிக்க வேண்டும். மொத்தத்தில் புத்திஜீவிகள் என்ற இந்த ஐதீகம் தகர்க்கப்பட வேண்டும் என்பது நமது நிலைப்பாடாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஒழுக்க நெறிகள்

ஒழுக்க நெறிகள் பற்றி இங்கு பேசுவதிலுள்ள பிரச்சினைகள். கடந்த காலத்தில் இதற்கு கொடுத்த முக்கியத்துவத்தின் அளவு இப்போது கொடுக்க முடியாது. கடந்த காலத்தில் அரசியல் இயக்கத்தில் கொள்கை, திட்டம், அமைப்புவிதிகள் உள்ளனவா எனப் பார்க்கப்படாது தொடக்கப் புள்ளியாக ஒழுக்க நெறிகளே பார்க்கப்பட்டன. அமைப்பிலுள்ள ஒருவர் புகைப்பிடிக்கின்றாரா, மது அருந்துகிறாரா, பாலியல் மீறல்கள் செய்தவரா என்பது பார்க்கப்பட்ட அளவிற்கு, அவரிடம் அரசியல் உள்ளதா என்பது பார்க்கப்படவில்லை.

அரசியலுக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தின் அடிப்படையில், இன்று ஒழுக்க நெறிகள் பற்றி பேசமுடியாது என்பதை முதலில் புரிந்து கொள்ளுதல்.

ஒழுக்க நெறிகள் என்பதை குறிப்பிட்ட சில வரையறைகளுக்கும் அடக்கிவிடுவது சரியானதா? கொள்கை, திட்டம், ஒழுக்க நெறி என்பவற்றுடன் விழுமியங்களையும் உள்ளடக்க வேண்டிய அவசியம்.

ஆதிக்க மனோபாவங்கள், போக்குகளை விழுமியங்களாகக் கொண்டுள்ள ஒருவர் தன்னளவில் ஒழுக்கம் கொண்டவராக இருப்பதாக கருதமுடியாதுள்ளது. இந்த தலைப்பின் கீழ் புரட்சியானது அறங்கள் பற்றிய பிரச்சினை, ஒழுக்கநெறிகள், விழுமியங்கள் என்ற மூன்றையும் சேர்த்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இந்தப் பின்னணியுடன் ஒழுக்க நெறிகள் பற்றிப் பேசுவோமாயின் புரட்சிகர சமுதாயத்தை அமைக்கப் போகின்றவர்கள் என்ற வகையில் அச்சமுதாயப் பண்புகளை (விழுமியங்கள், அறம், நெறிகள்) இப்போதே எமக்குள் கரு அளவில் கொண்டிருக்க வேண்டியதன் அவசியம். (எம்மால் இச்சமூக கட்டுமானத்திற்குள் இயன்ற வரை)

இந்த அடிப்படையில் நிலைப்பாடுகளை அடைவதில் உறுதியாகவும், அதேவேளை அதனை பின்பற்றுவதில் கையாள வேண்டிய தந்திரோபாயங்களில் கவனமாக இருத்தல். ஒழுக்க நெறிகள் பற்றி இன்றுள்ள சமூகத்தின் விளக்கங்கள் மிகவும் வேறுபட்டவை என்ற அளவில் நிலைப்பாடுகளை அமுல் செய்வதில் எடுக்க வேண்டிய எச்சரிக்கை. குறிப்பாக சமூகத்தால் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட்டு எமது ஏனைய புரட்சிகர முன்னெடுப்புகளுக்கு மிகவும் குந்தகம் ஏற்படுத்தக் கூடிய விடயங்களில் கவனமாக இருத்தல். ஒட்டு மொத்த மாற்றங்கள் ஒரு சமூக மாற்றத்தின் போதோ அல்லது பின்போ சாத்தியப்படும் என்ற விளக்கத்தில் அடிப்படையில் இது அமைய வேண்டும். அதையொட்டி அமைப்பானது சில தந்திரோபாயமான முடிவுகளையும் எடுக்க வேண்டி வரும் என்பதை புரிந்து கொள்ளல்.



படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணிலைவாதம்

பெண்களிடம் இயல்பாக உள்ள சாதகமான (positive) அம்சங்களைத் தக்க வைத்துக் கொண்டு அதனை மேலும் மேலும் செழுமைப்படுத்துவதுடன் பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக வைக்கப்படும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கருத்துக்கள்தான் பெண்ணிலைவாதம் எனப்படுகிறது.

பெண்கள் போராடுவது ஆண்களாக மாறுவதற்கு அல்ல என்ற அடிப்படையிலும், பெண்விடுதலை மட்டும் என்ற முன்னைய போக்கில் இருந்து பெண்ணிலைவாதம் அடிப்படையில் வேறுபடுகிறது.

பெண்ணிலைவாதம் என்பது மேலைநாட்டு விடயம் என்பது கருத்து அடிப்படையில் பாரிய தவறானதாகும். காலங்காலமாக பெண்கள் தம்மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக பல்வேறு விதங்களில் எல்லா நாடுகளிலும் போராடி வந்துள்ளனர். அதன் சமகால வெளிப்பாடுதான் பெண்ணிலைவாதம். ஆணாதிக்கக் கருத்துக்களை தாங்கி நிற்பவர்களே இவ்வாறாக முத்திரை குத்துகின்றனர்.

புரட்சியாளர்களைப் பொறுத்தவரையில் பெண்ணிலைவாதம் முக்கியத்துவமானது. முழுமையான சமூக மாற்றம் என்ற வகையில் ஒடுக்கப்படும் சமூகத்தில் அரைவாசிப் பிரிவாகவுள்ள பெண்கள் விடுதலை பெறுவது முக்கிய இலக்காகிறது. அவ்வாறில்லாமல் சமூக மாற்றம் என்பதே சாத்தியப்படப் போவதில்லை.

பெண்களை ஒரு வர்க்கப் பிரிவாக கருதலாமா என்பதை பொறுத்த வரையில், பொருளாதார, வர்க்க குறுக்கல்வாத அடிப்படையில், ஒத்த ஒடுக்குமுறைகளைக் கொண்டுள்ள பெண்களை தனியான வர்க்கப் பிரிவாக கருதுவது ஒருவகை வர்க்கக் குறுக்கல்வாதமே. பெண்கள் ஒரு சமூக சக்தியே தவிர ஒரு வர்க்கமல்ல.

பெண்ணடிமைத்தனம் என்பதை ஊதியம், அரசியலில் உரிமை போன்றவையாக மட்டும் குறுக்கிவிடும் பார்வை. இது குடும்பம், பாலுறவு, gender (ஆண்மை/பெண்மை) போன்ற பல நிலைகளுக்கும் விரிவுபடுத்திப் பார்க்க வேண்டும்.

ஆண்கள் புரட்சியாளர்களாயினும் கூட அவர்களது நலன்கள் பல பெண்ணடிமைத்தனத்துடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. எனவே ஆண்கள் முற்றிலும் ஆணாதிக்க சிந்தனையில் இருந்து தாங்களாகவே விடுபடுவது சாத்தியமில்லை.

பெண்கள் தமது விடுதலைக்காகவும், தமக்கு சாதகமான அம்சங்களை பேணிக்கொண்டு அவற்றை மேலும் செழுமைப்படுத்துவதற்காக தாமே தீவிரமாக போராட வேண்டும். ஆண்கள் எவ்வளவுதான் முற்போக்கானவர்களாயினும் பெண்களின் விடுதலையை பெற்றுத் தந்துவிட முடியாது.

பெண்களின் ஒடுக்குமுறைக்கு அடிப்படைக் காரணம் இன்று நிலவும் ஆணாதிக்க சமூக அமைப்பே தவிர தனிப்பட்ட ஆண்கள் அல்ல. தனிப்பட்ட ஸ்தூல வாழ்வில் ஆண்கள் மூலம் ஒடுக்குமுறை வெளிப்படுவதை பெண்கள் உணர்ந்த போதிலும் முழு அமைப்பாக புரிந்து கொள்ளும் போதே பெண்களின் முழுமையான விடுதலை என்பது சாத்தியப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

# பல்வேறு பெண்ணிலைவாத கோட்பாடுகள் பற்றி

## 1. தாராள பெண்ணிலைவாதம் (Liberal Feminism)

முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றுவந்த காலப் பகுதியில் (18ம் நூற்றாண்டின் பிற்பகுதி) முதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் தமது சொத்துரிமை, அரசியல் உரிமை, கல்வி உரிமை கோரி ஆரம்பிக்கப்பட்ட இயக்கங்களாகும். ஒழுங்கமைக்கப்பட்ட போராட்ட வடிவங்களை இவர்கள் முன்னெடுத்த போதிலும் ஒட்டுமொத்த பெண்களின் விடுதலையை இவர்களால் அடைய முடியவில்லை.

## 2. மார்க்சிய பெண்ணிலைவாதம் (Marxist Feminism)

மார்க்சிய அமைப்புகளில் இருந்த பெண்கள் ஒட்டுமொத்தமான சமூக மாற்றத்தை உள்ளடக்கி, பெண்களின் பொருளாதார, அரசியல் சமத்துவங்களையும் இணைத்து இவ்வியக்கத்தை முன்னெடுத்தனர்.

தனிச் சொத்துடைமைதான் பெண்ணொடுக்குமுறைக்கு காரணம் என்பதால் சோசலிசத்தின் வருகையுடன் பெண்ணடிமைத்தனம் நீங்கிவிடும் என்ற கருத்தை இவர்கள் வெளிப்படுத்தினர். ஆனால் வரலாற்றில் இது நடைபெறவில்லை என்பதையும் நாம் அறிய முடிகிறது.

## 3. தீவிர பெண்ணிலைவாதம் (Radical Feminism)

பெண்ணடிமைத்தனம் என்பதை சமூகத்திலுள்ள முதன்மையான ஒடுக்குமுறையாக இப்பிரிவு கருதுகிறது. பெண்ணடிமைத்தனம் தீரும்போதுதான் சமூக மாற்றம் நிகழும் என வாதிடுகின்றார்கள். பல குறைபாடுகள் இவர்களின் கோட்பாகளில் இருந்த போதிலும் குடும்பம், பாலுறவு, gender (பெண்மை/ஆண்மை) போன்ற விடயங்களில் இத்தரப்பின் ஆய்வுகள் ஆழமானவை. பல்வேறு சமூக மாதிரிகளை உருவாக்கி பரீட்சித்துப் பார்த்துள்ளனர். தீவிரபெண்ணிலைவாத சிந்தனையானது மார்க்சியத்துக்கும் கூட குறிப்பான பங்களிப்பை ஆற்றியுள்ளது.

## 4. சோசலிச பெண்ணிலைவாதம் (Socialist Feminism)

இது மார்க்சிய பெண்ணிலைவாதத்தின் சில மரபான கருத்துக்களையும், தீவிர பெண்ணிலைவாதத்தின் கருத்துக்களையும் இணைத்துக் கொண்டது. முற்றுமுழுதான சமூக மாற்றத்தை கோருவதுடன் பெண்கள் தமது உரிமைகளுக்காக தனித்துவமான போராட்டங்களையும் முன்னெடுப்பதையும் இப்போக்கு கருத்தில் கொள்கிறது.

இங்கு நமது அமைப்பு சோசலிச பெண்ணிவாதத்தை தனது நிலைப்பாடாக மேற்கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

இவற்றைவிட பெண்ணிலைவாதம் தொடர்பாக பல்வேறு சிந்தனைப் பள்ளிகளை ஒட்டி அவற்றுக்கு இணையாக பெண்ணிலைவாத சிந்தனை மரபுகளும் வளர்ச்சி பெற்றுள்ளன. உ+ம்: இருப்பியல்வாதத்தை ஒட்டி, சிமன் டீ பூவா போன்றவர்களின் பெண்ணிலைவாதக் கருத்துக்கள், பின்நவீனத்துவம் (post modernism), பிராங்போர்ட் சிந்தனைப் பள்ளி, மார்க்சியம், சமூகவியலில் தோன்றும் புதிய கருத்துக்களுக்கு ஏற்ப பல்வேறு புதிய பெண்ணிலைவாத கருத்துக்களும் தோன்றியுள்ளன. இது ஒரு பரந்து விரிந்த துறையாக இன்று மாறியுள்ளது.

## தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்ணிலைவாதம் கையாளப்பட்டவிதம்

தமிழரசுக் கட்சி காலகட்டம் முதல் இன்றுவரை பெண்களை அமைப்புகள் பயன்படுத்துவதில் மட்டுமே குறியாக இருந்தன. பெண்களை அமைப்பாக்கி பெண்ணிலைவாதக் கேள்விகளை எழுப்பி போராட உந்துதலை அளித்தது கிடையாது. ஈ.பி. போன்ற அமைப்புக்களில் அதிகளவு பெண்கள் பங்குபற்றினாலும் மார்க்சியம், தேசியவாதம் போன்றவற்றிற்கு கொடுக்கப்பட்ட அழுத்தம் பெண்ணிலைவாதத்திற்கு கொடுக்கப்படவில்லை. எல்லா அமைப்புகளிலும் அமைப்புகளின் உயர்ந்த பட்ச முடிவுகள் எடுக்கும் நிலையில் ஆண்களே இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று புலிகள் அமைப்பில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு, தீவிரமாக போராட்டத்தில் பங்குபற்றியும் அதேவேளையில் சமூகத்தில் நிலவிய, பெண்கள் பற்றிய பல ஐதீகங்களையும் தவறென நிரூபித்தும் உள்ளனர். எனினும் அவர்கள் மத்தியில் பெண்ணிலைவாத கருத்துக்கள் முறையாக பரப்பப்படவில்லை. துருப்புகளாக பயன்படுத்தும் நிலைக்கு மேல் எதுவும் நகரவில்லை. ஆனாலும் அவர்கள் மத்தியிலும் சுயமான விழிப்புணர்வு ஏற்படாமல் இல்லை. இது எதிர்காலத்தில் புலி அமைப்பின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கவும் கூடும். ஏனென்றால் பெண்விடுதலை என்பது எல்லாவிதமான அதிகாரத்துவ வடிவங்களுக்கும் எதிரானதாகவே உள்ளது. புலிகள் அமைப்போ தனி ஆண் நபர் அதிகாரத்தில் சார்ந்து நிற்கும் ஒன்றாக உள்ளது. புலிகள் அமைப்பினுள் பெண்ணிலைவாத கருத்துக்கள் விரிவாக பரவுவது அமைப்பின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கக் கூடும்.

நமது சமூக அமைப்பு பெண் விடுதலையை தன் திட்டத்தின் ஒரு பகுதியாக வைத்துள்ளது. இதன்படி அமைப்பில் பெண்கள் முறையாக பிரதிநிதித்துவம் செய்யப்படுவதை உற்சாகப்படுத்துகின்றது. பெண்களின் விடுதலைக்காக தனியான அமைப்புகள் நிறுவப்படுவதையும் அமைப்பு உற்சாகப்படுத்துகின்றது. மேலும் அமைப்பினுள் காணப்படும் எல்லாவிதமான ஆணாதிக்க சிந்தனைகளுக்கும் எதிராக, அமைப்பு பிரக்ஞைபூர்வமாகப் போராடும்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் விடுதலைப் போராட்டம் தொடர்பான சில முக்கியமான விடயங்கள்

## 1. முஸ்லீம் மக்கள்

முஸ்லிம் மக்களை தனியான தேசமாக இனங்காண்கிறோம். இது தொடர்பான விரிவான அறிக்கையை அமைப்பு முன்வைத்துள்ளது. முஸ்லிம் மக்கள் தங்களை தனித் தேசமாக இனங்கண்டால், இதற்கு மேல் அதனுடனான எல்லா விதமான உறவுகளும் இரண்டு தேசங்களுக்கு இடையில் நடைபெறுகின்ற சமத்துவ அடிப்படையிலான முயற்சிகளாக அமைய வேண்டும். சமத்துவ அடிப்படையில் அதிகாரங்களையும், வளங்களையும் பகிர்வதாக இருக்க வேண்டும். எந்த தீர்வுகளையும் தமிழ் தேசம் அவர்கள் மீது திணிக்க முடியாது.

இந்த வகையில், முஸ்லீம் மக்களுக்கு தீர்வு என்ன என்பதைக்கூட பேசுவதை தவிர்க்க வேண்டும். தமக்கென அவர்கள் முன்னெடுக்கும் தீர்வுகளை ஆதரவளிப்பதற்கு மேல் நாம் செல்ல வேண்டியதில்லை.

இங்கு குறிப்பான பிரச்சினையாக யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம்கள் உள்ளனர். இது புலிகளால் செய்யப்பட்டாலும் கூட முழுத் தமிழ்த் தேசமும் இதற்கு பொறுப்பேற்க வேண்டியுள்ளது. இந்த முஸ்லீம் மக்கள் தமது முன்னைய இடங்களுக்கு நஷ்ட ஈட்டுடன் மீண்டு குடிவர உரிமை உடையவர்கள் என்பதை தமிழ் தேசம் அங்கீகரிக்க வேண்டும். உடனடியாக (முடியாத போது புரட்சிகர சக்திகள் பலம் பெறும் போராட்டத்தின் குறிப்பிட்ட ஒரு வளர்ச்சிக் கட்டத்தில்) வெளியேற்றப்பட்ட முஸ்லீம்களுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும்.

நமது அமைப்பில் சேர்ந்து இயங்கும் முஸ்லீம் அங்கத்தவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சர்வதேசியவாதிகள் என்ற அடிப்படையில் இணைந்து கொள்கின்றனர். அவ்வாறு இணைந்து கொள்ள எந்த தேசத்தை சேர்ந்தவர்களுக்கும் உரிமை உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## 2. மலையக மக்கள்

இவர்கள் இன்று ஒரு அரசியல் சமூகம் என்ற வகையில் ஒரு தேசமாக உள்ளனர். இவர்களை வலிந்து, ஈழப் போராட்டத்துடன் இணைக்கும் ஒவ்வொரு முயற்சியும் கூட ஒருவகையில் அவர்களின் சுயநிர்ணய உரிமையை மீறுவதாகிறது. இப்போக்கை தமிழ் தேசத்திடம் காணப்படும் ஆதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாக கருத வேண்டும்.

அவர்கள், வளர்ந்து வரும் தேசம் என்ற வகையில் தமது எதிர்காலம் பற்றிய முடிவுகளை தாமே மேற்கொள்ளும் உரிமை உடையவர்கள். அவர்களின் எந்த முடிவையும் நாம் ஆதரிப்பதுடன் நின்றுவிட வேண்டும். தமிழீழத்தில் குடியேற்றப்பட்டுள்ள மலையக மக்களைப் பொறுத்தவரையில் இன்று அவர்கள் தமிழ் தேசத்துடன் ஒன்று கலந்துவிடவில்லை. ஒரு தேசிய சிறுபான்மையாக நிலவுகின்றனர். தமிழீழத்தில் தேசிய சிறுபான்மையாக வாழும் உரிமை உடையவர்கள். அவர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பது, அமையும் தமிழீழ அரசினதும், மக்களினதும் கடமையாகும்.

## 3. தமிழீழத்தில் வாழும் சிங்கள மக்கள்

இவர்கள் பலவகையில் அமைகின்றனர்.

1. சுயமாக, பொருளாதார காரணங்களுடன் ஆரம்பத்தில் குடியேறிவர்கள்

2. சிறிலங்கா அரசினால் திட்டமிட்டு குடியேற்றப்பட்டவர்கள்

3. தீவிரமடைந்து விட்ட ஈழப்போராட்டத்தை முடக்க வேண்டும் என்ற நோக்குடன் அரசின் இராணுவ மூலோபாயங்களின் ஒரு பகுதியாக அமைந்து பயிற்றப்பட்ட ஆயுதம் தரித்தவர்களாக முக்கிய கேந்திர நிலையங்களில் குடியேற்றப்பட்டவர்கள்.

முன்னைய இருபிரிவினரை போலல்லாது 3ம் பிரிவினரை போராட்ட காலத்தில், நாம் எதிர்கொண்டு முறியடித்து முன்னேற வேண்டியிருக்கும். ஆனால் இவர்களைக் கையாளும்போது இயன்றவரை முதலில் அரசியல் ரீதியாகவும், உயர்ந்த பட்ச மனிதாபிமான அடிப்படையிலும் கையாள வேண்டும்.

நீண்ட காலமாக தமிழீழத்தில் குடியிருப்பவர்கள் தொடர்ந்தும் அங்கு வாழும் உரிமை பெற்றவர்கள். இவர்கள் தேசிய சிறுபான்மையாகக் கருதப்படுவர். அவர்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பது, அமையும் தமிழீழ அரசினதும் மக்களினதும் கடமையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# சாதியம்

சாதியம் எமது சமூகத்தில் யதார்த்தமாக நிலவும் ஒடுக்குமுறையாகும். இதுபற்றிய கோட்பாட்டு ரீதியான ஆய்வுமுறை நமது சூழலில் இதுவரை நடைபெறவில்லை. பொருளாதாரவாதம் இதனை ஒரு வர்க்க ஒடுக்குமுறையாக மட்டும் காட்ட முனைகின்றன. முழுமையான சமூக மாற்றத்துடன் இந்த ஒடுக்குமுறை ஒழிந்து விடும் என்கிறது.

சாதியமைப்பை பல்வேறு சித்தாந்தங்களும் பலப்படுத்துவதால் இதனை தனியான கட்டமைப்பாக பரிசீலிக்க வேண்டியுள்ளது.

60களில் முனைப்பாக இருந்த சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் பின்னர் தீவிரம் குறையத் தொடங்கியது. எனினும் இப்போது ஒடுக்குமுறையானது தமிழ் சமூகத்தில் பல்வேறு வடிவங்களில் நிலவுகிறது.

சாதிய வகையில் ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டி பலமான போராட்ட சக்தியாக மாற்றிய வகையில் ஈ.பி. போன்ற அமைப்புக்கள் ஓரளவு பணியாற்றியுள்ளன. இது கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு படிப்பினை.

சாதியம் தொடர்பான நமது அமைப்பின் நிலைப்பாடு:

1. சாதிய ஒழிப்பு என்பது சமூகப் புரட்சியின் பிரிக்க முடியாத ஒரு பகுதி.

2. சாதியத்தின் பேரிலான அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக போராடுவது.

3. இவ் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களில் மக்களின் முன்முயற்சிகளை ஊக்குவித்தல்.

4. சாதிய எதிர்ப்பு போராட்டங்களுக்காக் துணையான அமைப்புகளை உருவாக்குதல்

5. காலங்காலமாக ஆழமாக மனதில் பதிந்து கிடக்கும் சாதியம் குறித்த பிற்போக்கு சித்தாந்தங்களை அங்கத்தவர் மத்தியில் இருந்தும் மக்கள் மத்தியில் இருந்தும் அகற்ற அமைப்பானது தொடர்ச்சியான சித்தாந்த போராட்டங்களை நடாத்துதல்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கட்சியின் சர்வதேச நிலைப்பாடு

உலகை தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர முனையும் அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்திய முகாம் இன்றைய மிகப் பெரும் எதிரியாகும். சர்வதேச ரீதியாக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம் என்பது எமது கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடும் அனைத்து உலக சக்திகளுடனும் இணைவை ஏற்படுத்துவதன் மூலம் சிறிய தேசங்கள் இப்பிரச்சினையை முகம் கொடுக்க முடியும்.

## நமது போராட்ட சூழலில் குறிப்பான விடயங்கள்

தமிழ் தேசத்தை நேரடியாக ஒடுக்கும் சிறீலங்கா அரசிலிருந்து நாம் பிரிந்து சென்று தனியரசு அமைக்க விழைவதால் அது, எமது முதலாவது எதிரியாகிறது.

சிங்கள மக்கள் பேரினவாத அரசின் கைதிகளாகி அதற்கு துணை போகின்றார்கள் என்ற போதிலும் உள்ளார்ந்து சிங்கள அரசிற்கும் சிங்கள மக்களிற்கும் இடையே முரண்பாடுகள் நிலவக் கூடிய வாய்ப்புகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த வகையில் சிறிலங்கா அரசிற்கு எதிரான சிங்கள மக்களின் போராட்டங்களை ஆதரித்து அதற்கு எமது ஒருமைப்பாட்டைக் காட்ட வேண்டும்.

## இந்தியா பற்றி

தமிழீழ அரசு அமைவதானது, இந்தியாவிலுள்ள ஒடுக்கப்பட்ட தேசங்கள் கிளர்ந்தெழ உந்துதலாக அமையும் என்பதால் தமிழீழ விடுதலை போராட்டத்தை இந்திய அரசு தீவிரமாக எதிர்க்கிறது. அத்துடன் இலங்கையின் ஒற்றையாட்சி அமைப்பில் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு தீர்வும் கூட இந்தியாவிலுள்ள போலியான சமஷ்டி அமைப்பைவிட கூடியதாக இருந்து விடக் கூடாது எனவும் சிங்கள அரசிற்கு இந்திய அரசு நெருக்குதல் கொடுக்குகின்றது. மேலும் பிராந்திய வல்லரசான இந்தியா தனது செல்வாக்கு பிராந்தியத்தினுள் ஒரு புதிய, புரட்சிகர அரசு ஏற்படுவதை நசுக்கி, சிதைக்கவே முயலும் என்பதால் இந்திய அரசும் எமது எதிரிகளில் ஒன்றே.

இந்தியா என்பது ஒரு தேசம் அல்ல. அது பல தேசங்களின் சிறைக்கூடம். இன்று கடைசியாக தகர்ந்து செல்லும் ஒரு சாம்ராஜ்யமாக அதனை நோக்க வேண்டும்.

இந்த வகையில் இந்தியாவில் இருந்து பிரிந்து செல்லப் போராடும் தேசங்களுடனும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடனும் சமூகப் பிரிவுகளுடனும் நெருக்கமான இணைவை நாம் ஏற்படுத்த வேண்டும்.

தமிழகம் தமிழீழ போராட்டத்துடன் நெருக்கமாக உறவைக் கொண்டதாகும். கலாச்சாரம், பிராந்தியம், இந்திய மத்திய அரசுக்கு எதிரான போராட்டம் என்ற வகையில் இவ்வுறவுகள் உள்ளன. எனவே அங்குள்ள புரட்சிகர, தேசியவிடுதலை மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராடும் மற்றைய இயக்கங்களுடன் நம்மை இனங்காட்ட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

## தெற்கு ஆசிய நாடுகள்

உலகளாவிய ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிராக தாக்குப் பிடிக்க சிறிய தேசங்கள் பிராந்திய ரீதியில் ஒருங்கிணைப்பை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இந்த வகையில் நாமும் தென்னாசிய பிராந்தியத்தில் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்துவதில் அக்கறை எடுக்க வேண்டும். பிராந்தியத்திலுள்ள புரட்சிகர அமைப்புகள் அல்லது ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராடும் மற்றைய இயக்கங்களுடன் இவ்விணைப்பு அமையும்.

## பொதுவாக சர்வதேசிய போக்குகளில்

எங்கெல்லாம் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்கள், தேசங்கள், வர்க்கங்கள், சமூகப் பிரிவுகள் உள்ளதோ அவற்றுடன் விரிவான ஒருமைப்பாட்டை நாம் வெளிப்படுத்த வேண்டும்.

உலகில் நடைபெறும் குறிப்பான ஒவ்வொரு போராட்டங்கள் தொடர்பாகவும் அமைப்பு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது அவசியம்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் விடுதலைப் போராட்ட வரலாறு

இதனை சுருக்கமாக நாலு கட்டங்களாக பிரிக்கலாம்.

1. 1970 வரையிலான காலகட்டம்
2. 1970 - 1983 இடையிலான காலகட்டம்
3. 1983 - தொடக்கம் இன்று வரையில்
4. எதிர்காலத்தில் நாம் போராட்டத்தை மேற்கொள்ளப் போகும் காலகட்டம்

இந்த ஒவ்வொரு கட்டத்திற்கும் குறிப்பான பொதுப்பண்புகள் உள்ளது. தலைமையின் பண்புகள் அதன் பெறுபேறுகள் என்ற வகையில் இக்கட்டங்களை மதிப்பிட வேண்டும்.

## 1970 வரையிலான காலகட்டம்

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் முளைவிடத் தொடங்குகின்றன. அடுத்து எழுதப்பட்ட அரசியல் யாப்புகளில் இம்முரண்பாடுகள் கருத்தில் கொள்ளப்பட்டன.

1930களுக்கு பின் கூர்மையடைந்த தேசிய ஒடுக்குமுறை 1948 சுதந்திரத்தின் பின்னர் பிரதான வடிவில் தீவிரமடைகின்றது. இதற்கு எதிராக தமிழ் தேசிய இயக்கங்கள் படிப்படியாக உருவாதல். குறைகளுடன் போராட்டங்களை முன்னெடுக்கப்படல். 60களின் கடைசிப்பகுதியில் தன்னியல்பாக இளைஞர்கள் குழுக்கள் உருவாதல். தமிழீழம் என்ற கருத்தாக்கத்தை நோக்கி படிப்படியாக வளர்தல்.

## 1970 - 1983 இடையிலான காலகட்டம்

ஐக்கிய முன்னணி அரசாங்கம் வருகையுடன் தேசிய ஒடுக்குமுறை தீவிரமடைதல் = 1ம் கட்டத்தின் பிற்பகுதியில் உருவான சிறிய குழுக்கள் தன்னுணர்வுடன் போராட்டங்களில் ஈடுபட்டு, தேசிய கிளர்ச்சிகளை வளர்த்துச் செல்லும் போக்கு. அடுத்த வளர்ச்சிப் போக்காக தீவிரமான போராட்ட குழுக்கள் உருவாகி வளர்ந்து, தேங்கி சிதைவதும் மீண்டும் தொடங்குவதுமான போக்குகள் நடைபெற்றன. இனஒழிப்பு நடவடிக்கைகளையும் அதனுடன் தொடர்பாக பல்வேறு அமைப்புகளும் வளர்ச்சி பெற்று வீக்கமடைவதும் நடைபெற்றன.



படிப்பகம்

www.padippakam.com

## 1983 இன்று வரையில்

இயக்கங்கள் தன்னியல்பாக வேகமாக செயல்படுவது. இந்திய அரசின் உதவியுடன் ஆயுதப் பயிற்சிகள் பெறுவது. இயக்கங்கள் தமக்குள் மோதுவது, அராஜகங்கள் மேலோங்குவது. புலிகள் தலைமை ஆதிக்க சக்தியாக மாறும் காலகட்டம் இதுவாகும். இடையே இந்திய அரசு நேரடியாக தலையிட்டு இந்திய – இலங்கை ஒப்பந்தம் நடைபெறுவதும் அதன் பின்னான நிகழ்வுகளும்

## நாம் போராட்டத்தை மேற்கொள்ளும் காலகட்டம்

இன்றைய கட்டம் புதிய மாற்றம் ஒன்றுக்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் காலகட்டமாகும். தேசியவிடுதலைப் போராட்டத்திற்கு ஒரு பிரக்ஞைபூர்வமான தலைமையைத் தான் முதன்முதலாக உருவாக்கும் காலகட்டம். தேசியம் என்பது கோட்பாட்டு ரீதியில் பேசப்படுகிறது. போராட்டத்தை முறையாக மதிப்பிடுவதற்கான முயற்சிகள் நிகழ்கிறது. தன்னியல்பும் பிரக்ஞைபூர்வமான செயல்படும் வேறுபடுத்தப்படுகிறது. எனவே அடுத்து வரும் காலகட்டத்தின் ஒரு தொடக்கமாகவே இதனைக் கருதவேண்டும்.

இங்குதான் தமிழ்ழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக பேரினவாதம் பரப்பியுள்ள ஐதீகங்களையும் களைய வேண்டும் எனப் பிரதானமாக நாம் முயல்கின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com

# தத்துவம்

## தத்துவம் என்றால் என்ன?

புரட்சியாளர்களுக்கு தத்துவம் ஏன் தேவை என்பதிலிருந்து தொடங்கலாம். ஒடுக்குமுறைக்கு எதிராக கேள்விகள் எழுகின்றன. நாம் வாழும் சமூகத்தை அறிந்து கொள்ள இயலுமா? அவ்வாறு அறிதலுக்கான வழிமுறை என்ன? இதையொத்த கேள்விகள் ஏனைய பல துறைகளில் அறிதலில் ஈடுபட்டவர்களுக்கும் எழுகின்றன. எனவே பொதுவாக அறிதல் பற்றிய முறை எல்லோருக்கும் அவசியமாகிறது.

அறிதல் பற்றி இப்பிரச்சினைக்கு தீர்வு கண்டால் அது இதனுடன் தொடர்புடைய அனைவருக்கும் தீர்வாகிறது. அவ்வகையில் அறிதல் என்பது எமக்கும் பிரதானமாகிறது.

அறிதல் பற்றி கூறும் அல்தூசர், தத்துவம் என்பது கோட்பாடுகளின் கோட்பாடு அல்லது விஞ்ஞானங்களின் விஞ்ஞானம் என்கிறார். ஒவ்வொரு கோட்பாடும் குறிப்பிட்ட வகை பிரச்சினைகளை கையாள்கிறது. இவை அனைத்தையும் தழுவிய கோட்பாடாக தத்துவம் அமைகிறது. இதனை உலகக் கண்ணோட்டம் எனவும் கூறலாம். பொதுவில் உலகம் எவ்விதம் இயங்குகிறது என்பது பற்றிய விஞ்ஞானமாக தத்துவம் அமைகிறது.

மார்க்ஸ் தனது காலத்தில் இப்பிரச்சினைக்கு முகம் கொடுக்கிறார். அவர் அது வரைக்கும் இருந்த தத்துவ மரபுகளை முறையாக பரிசீலித்துக் கொண்டு, புதிய வளர்ச்சிகளை உள்வாங்கி மிகவும் முன்னேறிய தத்துவமாக, இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்பதை முன்வைக்கின்றார். இதனை அவர் வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் அவரது ஆய்வு முறைகளில் இது பரவியுள்ளது.

இன்று இயக்கவியலை பொருள் முதல்வாதம்தான் ஒரே தத்துவம் என்று கூறுவதில் சில சிக்கல்கள் எழுகின்றன. இன்று விஞ்ஞானம் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டுள்ளது. இதனை-யொட்டி தத்துவமும் பல்வேறு கிளைகளாக விரிவடைகின்றது. இவ்வாறு விசாலமான நிலையில் முழு உலகப் பிரச்சினைகளையும் விளக்க ஒரே ஒரு தத்துவத்தை உருவாக்க முயலுவது சர்ச்சைக்குரியதாகவே உள்ளது. எனவே தாபனத்தின் ஒரே ஒரு தத்துவம் இருக்க வேண்டும், அது இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்பது ஒரு சர்ச்சைக்குள்ளாகவே செய்கிறது. ஆனால் புரட்சிக்காக போராடும் அமைப்பு என்ற வகையில் நமது அமைப்பிற்கு ஒரு உலகக் கண்ணோட்டம் இருப்பது அவசியமே. அதனை அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக போராடுவது என்பதாக வரையறுத்துக் கொள்வது தற்போதைக்கு சாத்தியமானது எனக் கருதுகின்றோம்.

நாம் முகம் கொடுக்கும் குறிப்பான பல பிரச்சினைகளில் சில

1. ஆன்மீகம் (Spiritualism)
2. பாலுறவு தேர்வு (Sexual Orientation)
3. வயதுத்துவம் (Ageism)



படிப்பகம்

www.padippakam.com

# ஆன்மீகம்

மனிதர்கள் சமூகஜீவிகள் என்ற வகையில் ஆன்மீக தேவையுடையவர்களாக இருத்தல். மதங்கள் இதனை கருத்திற்கு எடுத்தே செயற்பட்டுள்ளன. ஆன்மீகம் என்பதை சரியாக புரிந்து கொள்வதில் மார்க்சியம் தவறு இழைத்துள்ளதாக எல்லா மார்க்சியவாதிகளிடமும் பொதுவான கருத்து உள்ளது. மனிதர்களின் ஆன்மீக தேவைகளை புரிந்து கொள்ளாமல் அவற்றை உடைக்கும்போதும் சரியான மாற்றுக்கள் இன்றி மதங்களை தகர்க்கும் போதும் சில புதிய சிக்கல்கள் எழுகின்றன

நாம் புரட்சிகர சமுதாயத்தை அமைக்க விழைகின்றோம் என்ற வகையில் உயர்ந்த மானுட விழுமியங்களை படைக்கும் அக்கறை எமக்கு அவசியம். அதனை எம்மளவில் இப்போது உருவாக்குவதற்குப் அதைப் பற்றி நாம் பேச வேண்டியுள்ளது. முழுமையான மனிதத் தன்மை வளர்ச்சி பெறாதவர்களால் கட்டமைக்கப்படும் சமுதாயம் பூரணத்துவமாக அமையும் என்று கருத முடியாதுள்ளது. எனவே இங்கு புரட்சிகர ஆன்மீகம் பற்றிய கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது. புரட்சியாளர்களுக்கான அறநெறிகளின் ஒரு கூறாக இது அமைய வேண்டும்.

கடந்த காலத்தில் மக்களிடம் இருந்த ஆன்மீக தேவையை மதங்கள் பயன்படுத்தி தமது கருத்துக்களை ஆழமாக உருவாக்கியுள்ளன. இவற்றை ஆளும் வர்க்கங்கள் தமது நலன்களுடன் இணைத்து நிறுவனங்களாக்கி மக்களை ஒடுக்க இந்த ஆன்மீகக் கூறுகளை பயன்படுத்துகின்றன.

எனவே, நாம் மதங்களை அணுகும் போது அதன் ஆன்மீகக் கூறுகளையும், நிறுவனங்களாகி ஒடுக்கு முறைக்காக அதன் அம்சங்கள் பயன்படுத்தப்படுவதையும் வேறுபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதைக் கருத்தில் கொண்டு சில புரட்சிகர கட்சிகள் பொதுவாக மத நம்பிக்கையுடையோர் கட்சியின் திட்டத்தை ஏற்றுக் கொண்டு அதற்காக உறுதியாக செயற்படும் நிலையில் இருந்தால் அவர்களின் மத நம்பிக்கையை தனிப்பட்ட விடயமாக விட்டுவிடுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# பாலுறவுத் தேர்வு

எமது சமூகத்தில் எதிர்ப்பாலினச் சேர்க்கை (heterosexual) தான் ஒரே சரியான நியமமான விடயம் என்ற கருத்து ஓங்கியுள்ளது. இதனை மீறி நிற்கும் எந்த உறவுகளும் பிறழ்வுகள், அசாதாரணம் எனப் பார்க்கப்பட்டு கண்டிக்கப்படவும் ஒதுக்கப்படுவதுமான நிலையே காணப்படுகிறது.

ஆனால் பாலுறவு தொடர்பான பல்வேறு ஆய்வுகளும் பெண்ணிலைவாதக் கோட்பாடுகளும் எதிர்ப்பாலினச் சேர்க்கை தவிர்ந்த பாலுறவு முறையை பின்பற்றுபவர்களின் போராட்டங்களும் சில உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளன.

இதன்படி நிலையான, நியாயமான இயல்பான ஒரு பாலுறவு முறை இல்லை என்று நிரூபிக்கப்படுகிறது. பல்வேறு நபர்கள் பல்வேறு காரணங்களுக்காக தமக்கேற்ற பாலுறவு முறைகளை தெரிவு செய்கின்றனர். இது அவர்களின் தனிப்பட்ட சுதந்திரமாக பார்க்க வேண்டும். எல்லா உறவுகளையும் ஒன்றுக் கொன்று இணையாக வைத்துப் பார்க்க வேண்டும்.

பாலுறவு தேர்வு என்பது ஒருவரது தனிப்பட்ட விடயம் என்பதாக விட்டுவிட வேண்டும். மாறாக குறித்த பாலுறவு முறையை விரும்பும் வரை அவர் சிறுபான்மை என்பதற்காக நசுக்கவோ இழிவுபடுத்தவோ கூடாது.

அதேவேளை இருசாராரினதும் சம்மதமற்ற எந்தவகையான கட்டாயப் பாலுறவோ அல்லது எவ்விதமான எத்தனிப்போ மேற்கொள்ளப்பட்டாலும் அவை பாரதூரமாகக் கண்டிக்கப்பட வேண்டியவை என்பதை இங்கு வலியுறுத்த வேண்டியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## வயதுத்துவம்

வயோதிபர்கள் அல்லது இளம் பராயத்தவர்களை வயது வேறுபாடு காரணமாக அவர்களின் உரிமைகள், கௌரவங்கள், பங்குபற்றுதல்களை மறுப்பது என்பது வயதுத்துவம் (ageism) எனப்படும். வயது வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட பிரிவினர் மீது பாகுபாடு காட்டுவது தவிர்க்க வேண்டிய ஒரு போக்காகும்.

சிறுவர்கள் சமூகத்தில் தங்கியிருக்கவும் பராமரிக்கப்படுவதற்குமான உரிமையைக் கொண்டவர்கள். வயோதிபர்கள் கடந்த காலத்தில் சமூக உருவாக்கத்தில் பங்கு கொண்டவர்கள் என்ற வகையில் சமூகத்தால் தாம் பராமரிக்கப்படும் உரிமையைக் கொண்டுள்ளனர். இவற்றை மறுப்பது தவறு. இவற்றுடன் தொடர்பாக நாம் பல விடயங்களை முகம் கொடுக்கின்றோம். யுத்தமும், புலம்பெயர்வுகளும், அகதி வாழ்வும் இந்த இரண்டு தரப்புகளில் பௌதீக, ஆன்மீகக் கூறுகளை மிகவும் சிதைப்பதைக் காண்கிறோம்.

இவ்வாறு போராட்டத்தில் இளைஞர்கள் ஈடுபடும்போது, பழமைவாதிகள் அவர்களை எதுவும் தெரியாதவர்கள் போல் இகழ்வதும் நடைபெறுகிறது. மறுபுறம் புலிகள் தமது ஆட்சேர்ப்பு இலக்காக மிக வயது குறைந்தவர்களை, சமூகத்தின் பராமரிப்பில் இருக்க வேண்டியவர்களை தம்முடன் சேர்த்துக் கொள்ளும் போது தவறு நடைபெறுகிறது.

மேலும், அனுபவம் வாய்ந்த முதியவர்கள் கருத்துக்கள் கூறும்போது அது பழைய கருத்துகள் என சமூகத்தால் கழித்துவிடப்படும் தவறும் நடைபெறுகிறது.

இவற்றை நாமும் அமைப்பிலுள்ளும் சமூகத்திலும் முகம் கொடுத்து முறியடிக்க வேண்டும். குறிப்பாக அமைப்பினுள் இவ்விதமான அணுகுமுறைகளை அனுமதிக்க கூடாது.

## தள அறிக்கைகள்

இது தொடர்பாக 3 விரிவான ஆவணங்கள் முன்பே வைக்கப்பட்டு மாநாட்டில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

1. எமது அமைப்பின் கடந்த கால வரலாறு
2. எமது அமைப்பின் சுயவிமர்சனம்
3. தன்னியல்புவாதம் குறித்து

எமது போராட்டத்தில் ஏற்பட்ட பல்வேறு தவறுகளுக்கும் அடிப்படைக் காரணம் போராட்டமானது முற்றிலும் தன்னியல்பாக முன்னெடுக்கப்பட்டதே எனக் கருதுகின்றோம். இன்று முற்றிலும் வேறுபட்ட முறையில் உணர்வு பூர்வமாக போராட்டத்தை மேற்கொள்வதாயின், எமது கடந்த கால வேலைமுறை, சிந்தனை முறை என்பவற்றுடன் முற்றிலும் கணக்குத் தீர்த்தாக வேண்டும் எனக் கருதுகிறோம். எமது கடந்த காலத்தை விரிவாக பரிசீலிப்பதும் விவாதிப்பதும் இங்கு அவசியமாகிறது.

www.padippakam.com

இது எமது முதலாவது சர்வதேச மாநாடு என்ற வகையில் பல குறைபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் அவற்றையும் கடந்து நாம் மிகுந்த பயனைப் பெற்றுள்ளோம். மிக நீண்ட காலத்திற்கு பின்னர் அமைப்பானது ஓர் உத்வேகம் பெற்றுள்ளதை உணர முடிகிறது.

எமது தேசவிடுதலைப் போராட்டத்திலும் எமது அமைப்பின் வரலாற்றிலும் இந்த மாநாடு ஒரு திருப்புமுனை என்பது பங்கு கொண்ட அனைவராலும் உணர்ந்து கொள்ளப்பட்டது. இதனூடாக ஓர் உயர்ந்த பட்ச தோழமை உணர்ந்து கொள்ளப்பட்டதையும் காண முடிந்தது. இதே உணர்வுடன் நாம் முனைப்புடன் செயற்படுவோமாயின் எதிர்காலத்தில் ஆற்றப்பட வேண்டிய பல்வேறு வரலாற்றுப் பணிகளையும் நிறைவு செய்ய முடியும் என்ற நம்பிக்கை பிறக்கிறது.

எதிர்காலத்தில் தோன்றும் கருத்து வேறுபாடுகளையும் இவ்வாறு விரிவாக ஜனநாயக பூர்வமாக விவாதித்து தீர்வு கண்டு ஒருமித்த உணர்வுடன் அமைப்பானது முன்னேற வேண்டும். மிகவும் கடினமான பணிகளை நாம் எதிர்கொண்டுள்ளதால் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டு எமது வரலாற்றுக் கடமையை ஆற்றுவோம் என உறுதி பூணுவோம்.

இறுதியாக பேரினவாத ஒடுக்குமுறைக்கும், விடுதலை அமைப்புகளின் அராஜகங்களுக்கும் பலியான அனைத்து மக்களுக்கும், விடுதலைப் போராளிகளுக்கும், எமது அமைப்பு தோழர்களுக்கும் இந்த மாநாடு தனது ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்